வக்கீல்

398

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

ஆகஸ்டு 1953

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

அணா 4

THE VAKIL ✶ TAMIL LAW MAGAZINE

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்
பெப்பர்மெண்டுகள்

*

தயாரிப்பவர்கள் :
தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,
கும்பகோணம்.
(Estd. 1925)

"வக்கீல்"

பொது மக்களுக்கான

உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,
[ஆசிரியர்]

1953 ஜூலை முதல் "வக்கீல்" புதிய சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச்சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அததன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும். மற்ற விபரங்களுக்கு 1953 ஜூலை இதழ் பார்க்கவும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் " வக்கீல் " காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ.	100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ.	80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ.	60
ஷை ... அரைப் பக்கம்	ரூ.	35
ஷை ... கால் பக்கம்	ரூ.	20
ஒரு காலம் - அங்குலம்	ரூ.	5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 5 — ஆகஸ்ட்டு 1953 — இதழ் 8

கூழாங்கற்களுக்குப் பதில் துப்பாக்கி ரவைகளே 3

புதிய சட்டங்கள்

விவசாயிகள் பகுதி

* சிதம்பரம் கூடலூர் தாலூக்காக்களில் தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் — பாதுகாப்புச் சட்ட விஸ்தரிப்பு. 5

வழக்கும் - தீர்ப்பும்

* வீடு கட்டடங்களுக்குப் பக்க வட்டாரத்திலிருந்து வரும் காற்று வெளிச்சம் முதலிய வசதிகளைப் பற்றிய உரிமை என்ன? 8
* கிரயம் செய்தவர் கிரய சொத்திலிருந்த ஜப்தியை நீக்குவதற்காக ரூ. 500 வைத்துக் கொண்டார். ஆனால் அவர் அதைக் கொடுக்கவில்லை. பிறகு நஷ்ட ஈடு ரூ. 9500ம் இரண்டு கோர்ட் செலவுகளையும் கொடுத்தார். 10
* அர்ச்சகர்களிட மிருக்கும் நிலங்கள் — சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு. 11
* 'ஒத்தபடி' கையெழுத்தை மட்டில் ஆதாரமாக வைத்துத் தாவா செய்யலாமா? 12
* நம்பிக்கைத் துரோகத்தைச் சட்டம் அனுமதிக்கவில்லை. 13

சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் 14

கேள்வியும் – பதிலும் 17

"ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் [48 நாள்]
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை

ரூ. 43-12-0

ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும், டை தொகை, வெள்ளி விளம்பரம் தபால் செலவிற்குமாகத் தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N.B :- (1) ஆர்டர் கிடைத்த 9-ம்நாள் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்
கோட்டமருதூர் - அரகண்டநல்லூர் P. O.
தெ. ஆ. ஜில்லா.

கல்யாண காலங்களுக்கு
பட்டு & நூல் ஜவுளிகள்
கிடைக்குமிடம்

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, : : கும்பகோணம்

ஹெட் ஆபீஸ் :

PHONE 84188

மைலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்

மதராஸ்.

"வக்கீல்" - அறிவிப்பு

"வக்கீல்" பத்திரிகைக்கு எல்லா இடங்களிலும் வருட சந்தாதார்கள் சேர்க்கவும் விளம்பரம் சேகரிக்கவும் ரசீது கொடுக்கவும் தேதியூர் ஸ்ரீ P. ராமய்யா அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

மானேஜர் - "வக்கீல்"

"வக்கீல்" - அறிவிப்பு

"வக்கீல்" பத்திரிகைக்கு எல்லா இடங்களிலும் வருட சந்தாதார்கள் சேர்க்கவும் விளம்பரம் சேகரிக்கவும் ரசீது கொடுக்கவும் தண்டாங்கோரை ஸ்ரீ T. S. வெங்கட்ராமன் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

மானேஜர் - "வக்கீல்"

"ஜெயராம்" காயசுத்தி லேகியம்

REGD. No. 138512

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4-8-0 ½ சேர் ரூ. 2-4-0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம் :— ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

187725

மலர் 5 ஆகஸ்ட்டு 1953 இதழ் 8

கூழாங்கற்களுக்குப் பதில் துப்பாக்கி ரவைகளே!

முன் ஒரு காலத்தில், தான் விலங்குகளுடன் விலங்காகக் காட்டில் வசித்து வந்ததை, மனிதன் இன்னும் அறவே மறந்துவிடவில்லை. மனிதன் தனக்குச் சமுதாய வாழ்வு ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு சில ஆயிரம் ஆண்டுகள்தான் ஆகின்றன. காவல், கட்டுப் பாடுகளில் இருக்கும் மனிதன்தான் சற்றுப் பழைய காட்டு ஞாபகங்களை மறந்து நிற்கிறான். இக்காவல் வேலையைச் செய்து வருவதுதான் சர்க்கார். கட்டுப்பாடுகளுக்குத்தான் சட்டமெனப் பெயர்.

சர்க்காருக்கு வேறு பல அலுவல்கள் இருந்தாலும் மக்களிடையே இக்கட்டுப் பாடுகளைப் வற்புறுத்தி அமைதியை நிலைநிறுத்துவதே அதனுடைய முதல் கடமையாகும். தனி மனிதனை ஒரு கூட்டத்தார் தாக்காமலும், ஒரு இனத்தினரை வேறு இனத்தினர் துன்புறுத்தாமலும் பார்த்துக் கொள்ளுவது எந்த அரசாங்கத்திற்கும் முக்கிய முதல் கடமையாகும்.

சமீபத்தில் நடந்த சம்பவங்கள் தமிழ்ப் பொதுமக்களை பிரமிக்கச் செய்யும் சம்பவங்களேயாகும். நேரு எங்கேயோ ஏதோ சொன்னார் என்பதற்காகவும், சென்னை முதல் மந்திரியானவர் கல்வி விஷயத்தில் ஆட்சேபகரமான மாறுதல்களைச் செய்தார் என்பதற்காகவும், தமிழ் நாட்டில் வசிக்கும் பிராமண சமூகத்தினர் எப்படிப் பொறுப்பாளியாவார்கள்? எங்கேயோ மூலை முடுக்குகளில் ஒண்டிக் கிடக்கும், ஏழை, எளிய. பிராமணர்கள்மீது அதற்காகக் குரோதம் கொள்வதும், அவர்களை மானபங்கம் செய்வதும், பயமுறுத்துவதும், அவர்களை வேட்டையாடுவதும் பகுத்தறிவின் அடையாளங்களா? இனவேற்றுமை, மத வேற்றுமை முதலிய பாகுபாடுகள் நீடிக்கும் வரை, சர்க்கார் என்று ஒன்று இருந்தாலும், இல்லாவிட்டாலும், சிறுபான்மை இனத்தினரைப் பாதுகாக்கவேண்டிய ஒரு கண்ணியமான பெருங்கடமை பெரும்பான்மை இனத்தினரிடம் இருக்கிறது. பெரும்பான்மையினர் அக்கடமையைச் செய்யத் தவறினால், சர்க்கார்தான், தமது போலீஸ் படைகளின் மூலம் சிறுபான்மையைப் பாதுகாத்து அக்கடமையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அக்கடமையைச் செய்யும் போலீசார் மீது விடும் கூழாங் கற்களுக்குப் போலீசார் கையிலிருக்கும் துப்பாக்கி ரவைகள்தான் பதில் சொல்லவேண்டும்!

புதிய சட்டங்கள்

[illegible] யாகவும்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

9. சென்னை ஜமீன்- இனும் ஒழிப்புச் சட்டத் திருத்தம். Madras Estates-Abolition and Conversion into Ryotwari-Amendment Act 1953. (3-6-1953) இச் சட்டத்தின் செக்ஷன் 36ல் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒழிக்கப்பட்ட ஜமீன் அல்லது இனும்களுக்காக நஷ்ட ஈடு கொடுப்பது விஷயமாக வருஷாந்தர அடிப்படைத் தொகை என்ன என்று முதலில் நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். அத்தொகையிலிருந்து உள்பாத்திய எஸ்டேட்டுகள் சம்பந்தப்பட்ட வரையில், ஜோடி போன்ற எந்த எந்தத் தொகைகளை கழித்துக் கொள்ள வேண்டுமென்று இருக்கும் செக்ஷன் 36ல்—எப்படியும் மொத்த வருட வருமானத் தொகையில் சரி பாதிக்கு அதிகப்படாமல்தான் கழித்துக் கொள்ளலாமென்று ஒரு திருத்தம் இப்போது சேர்க்கப்பட்டிருக்கிறது.

10. பஞ்சு ஆலை சென்னை திருத்தச்சட்டம். Cotton Ginning and pressing Factories--Madras Amendment-- Act 1953. (10-6-1953) இச்சட்டத்தில் பருத்தி என்பதுடன் பருத்திக் கழிவும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வேறு சில திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

11. தென் ஆற்காடு ஜில்லா பழுப்பு நிலக்கரி நில ஆர்ஜிதச் சட்டம். Madras Lignite Acquisition Act 1953. (10-6-1953) தென் ஆற்காடு ஜில்லாவில் விருத்தாசலம், கூடலூர், சிதம்பரம் தாலூக்காக்களில் ஷெடியூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் 69 கிராமங்களில் பூமிக்குள் பழுப்பு நிலக்கரி இருப்பதால், அக் கரியைத் தோண்டி எடுத்து உபயோகிக்கும் பொருட்டு சென்னை சர்க்கார் 28-4-1947ல் சுரங்க வேலைகளை ஆரம்பித்தனர். அதற்காக நிலங்களை சொந்தக்காரர்களிடமிருந்து சர்க்கார் ஆர்ஜிதம் செய்து கொள்ள வேண்டியிருப்பதால் இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. பிரஜைகளிடமிருந்து சர்க்காருக்குத் தேவையான நிலங்களைக் கட்டாயமாக வாங்கிக்கொள்ள 1894-ஆம் வருடத்திய நிலஆர்ஜித சட்டப்படி குறிப்பிட்ட நிலத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ளுவதாக கெஜட் நோட்டீஸ் கொடுக்கும் தேதியில் அந்த நிலங்களின் காலக் கிரயம் என்ன என்று முதலில் தீர்மானிக்க வேண்டும். ஆனால் தென் ஆற்காடு ஜில்லாவில் பழுப்புக் கரியுள்ள இடங்களின் விலை இப்போது உயர்ந்து விட்டதால், 28-4-1947 தேதியில் அந்த நிலங்களின் விலை எதுவோ அவ்விலையை அடிப்படையாக வைத்துக் கொண்டு நிலக்காரர்களுக்கு சென்னை சர்க்கார் நஷ்ட ஈடு கொடுப்பதற்கான ஷரத்துக்கள் இச் சட்டத்தில் இருக்கின்றன. ஆனால் அத்தேதிக்குப் பின் கெஜட் நோட்டீஸ் தேதிக்கு முன் அந் நிலங்களில் ஏதாவது விவசாய சம்பந்தமான அபிவிருத்திகள் செய்யப்பட்டிருந்தால் அதன் கிரயமும் மேற்கண்ட நில விலையுடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

வெண்சங்கு நறுமண
குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.
நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 3817.
உரிமை:
S.பெத்தண்ண நாடார்
..கீழவாசல்–தஞ்சாவூர்..
சீயக்காய்த் தூள்

உ
ஸ்ரீ மகாலெஷ்மி துணை
திருக்காட்டுப்பள்ளியில்
பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள
ஸ்ரீ திருச்சி கபே
ஹோட்டலில் கை தேர்ந்த
பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்
பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும்
இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும்.
டீ பார்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு
ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை
செய்யப்படும். ஒருமுறை விஜயம்
செய்யவும்.

சிதம்பரம் கூடலூர் தாலுக்காக்களில் தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்ட விஸ்தரிப்பு

[தஞ்சை ஜில்லாவுக்காக மட்டில் 23-8-1952ல சென்னை கவர்னர் அவர்களால் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப் பட்டது. அதுதான் 1952-ம் வருடத்திய 4-வது அவசரச் சட்டமாகிய தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டம். இதில் 5-9-1952ல் பிறப்பிக்கப்பட்ட 1952-ம் வருடத்திய 5-வது அவசரச் சட்டத்தால் சில முக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டன. பிறகு 1-10-1952ல் இவை ரத்து செய்யப்பட்டு, ஜனாதிபதி அவர்களின் அனுமதியின் பேரில் சென்னை கவர்னர் அவர்களால் 1952-ம் வருஷத்திய 6-வது அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இச்சட்டம் கடைசியில் சென்னை சட்ட சபையால் ரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாகத்தான் 1952-ம் வருடத்திய 14-வது சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இச்சட்டம்தான் இப்போது தஞ்சை ஜில்லா பூராவிலும் அமுலில் இருந்து வருகின்றது. இச்சட்டத்தின் செக்ஷன் 2-பின் வருமாறு:—

"(2) இச்சட்டம் 23-8-1952ல் தஞ்சை ஜில்லா பூராவிலும் அமுலுக்கு வந்ததாக பாவிக்கப்படும்; சென்னை ராஜ்யத்தில் (தஞ்சைக்குப்) பக்கத்திலுள்ள இடங்களிலும் இச்சட்டத்தைக் குறிப்பிட்ட தேதி முதல் அமுலில் இருக்கும்படி கெஜட் அறிக்கை மூலம் சர்க்காரே விஸ்தரிக்கலாம்.

இருந்தாலும் கெஜட் அறிக்கை மூலம் குறிப்பிடப்படும் தேதி முதல், தஞ்சை ஜில்லாவில் எந்தப் பாகத்திலோ அல்லது இச்சட்டம் அமுலில் இருக்கும் வேறு குறிப்பிட்ட இடங்களிலோ இச்சட்டம் அமுலில் இல்லாமல் செய்யவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு."

செக்ஷன் 15:—"(1) தஞ்சை ஜில்லாவுக்குப் பக்கத்திலுள்ள எந்த இடததிற்காவது இச்சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டால், அதற்காக இச்சட்ட ஷரத்துக்களை

செக்ஷன் 15

கெஜட் அறிக்கை மூலம் மாற்றியும், திருத்தியும், விதிவிலக்குகள் ஏற்படுத்தியும் அங்கே அமுலுக்குக் கொண்டுவர சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

(2) அவ்வித அறிக்கைகள் இந்த ராஜ்ய அசெம்பிளி சட்ட சபையில் 14 நாட்களுக்குக் குறையாமல் வைக்கப்பட்டிருக்கவேண்டும்; அதற்குப் பிறகு அசெம்பிளி சட்ட சபைக் கூட்டத்தில் ஏற்படும் ரத்து திருத்தம் இவைகளுக்குட்பட்டே அவை அமுலுக்கு வரும்"—என்று தஞ்சைச் சட்டத்திலிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து சென்னை சர்க்கார் இச்சட்டத்தை 1-7-1953 தேதியுள்ள கெஜட் அறிக்கை மூலம் தென் ஆற்காடு ஜில்லாவில் சில இடங்கஙளுக்கு சில மாறுதலகளுடன் விஸ்தரித்திருக்கின்றனர்.]

தஞ்சைச் சட்டம் இப்போது விஸ்தரிக்கப்பட்டிருக்கும் இடங்கள்.

சிதம்பரம் தாலுக்காவில், காட்டுமன்னார் குடி பிர்கா, குமராட்சி பிர்கா, சிதம்பரம் மேற்கு பிர்கா, சிதம்பரம் கிழக்கு பிர்கா, புவனகிரி பிர்கா, இந்த பிர்காக்கள் பூராவுக்கும், சேத்தியாத் தோப்பு பிர்காவில் 12 கிராமங்கள் தவிர மற்ற எல்லா கிராமங்களுக்கும் கடலூர் தாலுக்காவில் 6 கிராமங்களுக்கும் இச்சட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. சேத்தியாத் தோப்பு பிர்காவில் வெள்ளார் ராஜன் வாய்க்காலுக்கு மேற்கே உள்ள கீழே கண்ட 12 கிராமங்களுக்கு இச்சட்டம் இல்லை அவையாவன:—கதலை, (மேல) வளயமாதேவி, (கீழ) வளயமாதேவி, அகர ஆலம்பாடி, பி. ஆதனூர், பெரிய நீர்குணம், சின்ன நீர்குணம், வீரமுடையாநத்தம், ஆனை வாரி, துரிஞ்சிக்கொல்லை, நெல்லிக்கொல்லை, எரும்பூர். கூடலூர் தாலுக்காவிலுள்ள கீழே கண்ட 6 கிராமங்களுக்கு இச்சட்டம் உண்டு. அவையாவன:— மருவை, அரங்கமங்களம், கல்குணம், பூதம்பாடி, ஆதூர் அகரம், கொதவாச்சேரி.

விஸ்தரிப்பு அமுல் தேதி.

1-7-1953 முதல் தஞ்சைச் சட்டம் மேற்கண்ட இடங்களில் அமுலுக்கு வந்துவிட்டது.

விஸ்தரிப்பு இடங்களில் சில ஷரத்துக்கள் மட்டும் மாற்றப் பட்டிருக்கின்றன. மற்ற ஷரத்துக்கள் அப்படியே உண்டு

தஞ்சைச் சட்டத்தில் சில ஷரத்துக்கள் மட்டில் கீழே கண்டபடி மாற்றப்பட்டிருக்கின்றன. இம்மாறுதல்களுடன் மற்ற தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள் எல்லாம் அப்படியே மேலே கண்ட இடங்களுக்கு உண்டு. மாறுதல்கள் விபரம்:

(1) தஞ்சைச் சட்டத்தின் செக்ஷன் 6 உட்பிரிவுகள் 1 முதல் 4க்கு பதிலாக கீழே கண்ட ஷரத்துக்கள் அமுலில் இருக்கும்.

சாகுபடிதார்களுக்கும் குத்தகைதார்களுக்கும் 5 வருட கெடுவுக்கு சாகுபடி செய்யும் உரிமை உண்டு.

செக்ஷன் 6

(1) 1-7-1953 தேதியில் நிலத்தைத் தம் அநுபோகத்தில் வைத்துக் கொண்டிருந்த சாகுபடிதார்களும் குத்தகைதார்களும், இச்சட்ட ஷரத்துக்களுக்குட்பட்டு, அதே நிலங்களை 1953—54 விவசாய வருட ஆரம்பத்திலிருந்து 5 வருடங்களுக்கு அதே முறைமையில் அனுபவிக்க உரிமை உண்டு

(2) 1-1-1953 தேதியில் நிலத்தை அநுபவித்து வந்த சாகுபடிதார்களும், குத்தகைதார்களும் 1-7-1953 தேதியில் அந்நிலங்கள் தங்கள் அநுபோகத்தில் இல்லாவிட்டாலும், தங்களுக்கு அதே நிலங்கள் மறுபடியும் சாகுபடிக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று கோரி சமரச அதிகாரிக்கு மனுப்போடலாம். ஆனால் இச் சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு முன்பே அந்நிலங்கள் வேறு ஒரு சாகுபடிதாருக்கு விடப்பட்டிருந்தால் மேற்கண்டபடி மனுப்போட முடியாது.

மேலே கண்டபடி நிலங்கள் திரும்பவும் சுவாதீனம் கொடுக்கப்பட்ட சாகுபடிதார்களும் இச்சட்ட ஷரத்துக்குட்பட்டு மேலே (1) ஆவது உட்பிரிவில் கண்ட 5 வருட கெடுவுக்கு, சாகுபடிதார் முறையில் அந்நிலங்களை அநுபவிக்கப் பாத்தியமுண்டு.

(3) மேலே (2) ஆவது உட்பிரிவின்படி சமரச அதிகாரிக்குப் போடப்படும் மனுக்கள் இச்சட்டம் அமுலுக்கு வந்த 30 நாட்களுக்குள் போடப்பட வேண்டும். மனுவில் ஒரு ரூபாய் கோர்ட்டு பீசு ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டும். இருந்தாலும் மேற்கண்ட கெடுவுக்குள் மனுப் போடாததற்குப் போதுமான காரணங்கள் இருப்பதாக சமரச அதிகாரிக்குத் திருப்திகரமாகத் தோன்றினால் மேற் கண்ட கெடுவுக்குப் பிறகும் மனுவை ஏற்றுக் கொள்ள சமரச அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

(4) சமரச அதிகாரியிடம் மனுக் கொடுக்கப்பட்டவுடன் அவர் நிலத்தின் சொந்தக்காரருக்கு இம்மனு சம்பந்தமாய் அவரவர்களுடைய ஆட்சேபனைகளைச் சொல்லிக் கொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பம்

அளித்து, மனுவில் கண்ட விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக விசாரணை செய்து மனுவை அங்கீகரித்தோ, தள்ளியோ உத்தரவு செய்யும்போது அவருக்கு நியாயமாகவும் சரியானதென்றும் தோன்றும் நிபந்தனைகளையும் அவர் ஏற்படுத்தலாம்.

(i) மனுதார் ஏற்கனவே நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டிய குத்தகை அல்லது வார பாக்கி ஏதாவது இருந்தால் ஒரு வருட பாக்கிக்கு மேற்படாத தொகையைக் கொடுத்து விடுவது பற்றியும்; (ii) மனுதார் வசம் நிலத்தின் சுவாதீனம் இல்லாமலிருந்த காலத்தில் நிலத்தில் செய்யப்பட்ட வேலைகளுக்காகவும் வேறு செலவுகளுக்காகவும் மனுதார் நிலத்தின் சொந்தக்காரருக்கு அதைத் திரும்பக் கொடுப்பது பற்றியும் இந்நிபந்தனைகள் இருக்கலாம். மேற்கண்ட செலவுகளைத் திரும்பக் கொடுப்பது சம்பந்தமாய் அது எவ்வளவு என்றும், அதை எப்படி திருப்பிக் கொடுப்பதென்றும் இருதரப்பினரும் ஒத்துக் கொள்ளாவிட்டால் தான் சமரச அதிகாரி இது விஷயமாய் நிபந்தனைகள் ஏற்படுத்தலாம்.

விவரணம்:—மேலே (2) ஆவது உட்பிரிவில் கண்டபடி ஒரு பழைய சாகுபடிதாரிடம் நிலம் கொடுக்கப்பட வேண்டியது சம்பந்தமான நிபந்தனைகள் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, சமரச அதிகாரி இஷ்டப்பட்டால் வேறு விதமாக உத்தரவு செய்யலாம். அதாவது அவர் உத்தரவு பிறப்பிக்கும் போது நிலத்திலுள்ள மகசூலானது அறுவடை செய்யப்பட்ட பிறகுதான் அந்நிலம் மனுதாருடைய சுவாதீனத்தில் விடப்பட வேண்டுமென்றும் உத்தரவு செய்யலாம்.

(2) செக்ஷன் 11 கீழேகண்டபடி திருத்தப்பட்டிருக்கிறது.

பண்ணையாட்களின் கூலி

செக்ஷன் 11

வேலை செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் பண்ணையாட்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும். கீழே கண்டபடி கூலி கொடுக்கப்படவேண்டும்.

அதாவது:—வயது வந்த ஆண்களுக்கு 2 மரக்கால் நெல்; வயது வந்த ஸ்திரீகளுக்கு 1 மரக்கால் நெல்; வயது வராதவர்களுக்கு ½ மரக்கால் நெல் வீதமும் ஒவ்வொருவருக்கும் கூலி கொடுக்கப்பட வேண்டும்.

இதற்கு மேற்கொண்டு பண்ணையாட்களுக்கு மாமூல் வரும்படிகளோ சலுகைகளோ கிடையாது. ஆனால் வயது வந்த ஒரு ஆண் பண்ணையாளுக்கு ஒவ்வொரு அறுவடையிலும் கண்டு முதலாகும் மொத்த மகசூலில் கலம் 1-க்கு ½ மரக்கால் வீதம் அல்லது நெல் தவிர வேறு தானியமாக இருந்தால் மொத்த மகசூலில் 24ல் 1 பங்குள்ள அறுவடைப் பங்கில், அவருடைய வீதமும் மாமூல்படி மனைக்கொல்லையும் அப்பண்ணையாளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

(3) பண்ணையாட்களை நீக்குவதுபற்றிய செக்ஷன் 12ல் '1-3-1952' என்ற தேதிக்குப் பதிலாக 1-1-1953 என்ற தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது இச்சட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் இடங்களில் 1-1-1953க்குப் பின்பு நீக்கப்பட்ட பண்ணையாட்கள்தான் சமரச அதிகாரிக்கு செக்ஷன் 12ன்படி புகார் செய்யலாம்.

(4) தஞ்சைச் சட்டத்தில் கண்ட ஷெடியூல், அதாவது மாயூரம் ஒப்பந்தக் கூலி விபரம் அடங்கிய ஷெடியூல், விஸ்தரிப்பு இடங்களுக்குக் கிடையாது.

இம்மாறுதல்களுடன் கூடிய மற்ற தஞ்சைச் சட்ட ஷரத்துக்கள் எல்லாம் அப்படியே விஸ்தரிப்பு இடங்களில் அமுலில் இருக்கும்.

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்

மறுபதிப்பு வெளியாகிவிட்டது

சட்ட சபையால் இயற்றப்பட்ட புதிய சட்டம்–விதிகள்–நமூனுக்கள்–குத்தகைப் பத்திர நமூனு – வார சாகுபடிப் பத்திர நமூனு உள்பட எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

விலை அணு 6

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

தேவையான பிரதிகளுக்கு கீழேகண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்யவும். ஏஜண்டுகள் கமிஷன் நீக்கி முன் பணம் அனுப்பவும்.

மானேஜர் — "வக்கீல்"

தமிழ் சட்டப் பத்திரிகை

தபால் பெட்டி 26, கும்பகோணம் (S. I.)

வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

வீடு கட்டடங்களுக்குப் பக்கவட்டாரத்திலிருந்து வரும் காற்று வெளிச்சம் முதலிய வசதிகளைப் பற்றிய உரிமை என்ன?

[ஆதாரம்:– 1953(2) மதராஸ் லா ஜர்னல் 816.]

உங்களுக்கு ஒரு வீடோ கட்டடமோ இருக்கின்றது. சுவரில், கீழேயோ மாடியிலோ, பல ஜன்னல்கள் இருக்கின்றன. பக்கத்தில் இருப்பது காலி நிலம் என்று வைத்துக் கொள்ளுவோம். இந்த ஜன்னல்கள் வழியாகப் பக்கங்களிலிருந்து உங்கள் வீடு அல்லது கட்டடத்திற்குள் காற்றும் வெளிச்சமும் வந்து கொண்டிருக்கின்றன. அடுத்த நிலத்தில் கட்டடமொன்றுமில்லாமல் அது காலியாக இருப்பதால் தான் நீங்கள் இவ்வசதிகளை அனுபவித்து வருகின்றீர்கள். அக்காலி நிலத்தின் சொந்தக்காரர் அங்கே ஒரு வீடோ கட்டடமோ கட்டுகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அவருடைய சொந்தப் பூமியில் அவர் வீடு கட்டிக்கொள்ள அவருக்கு உரிமை கிடையாதா? நிச்சயமாக உண்டு. ஆனால் அவர் தம்முடைய பூமியில் சுவர் எழுப்புவதால் உங்களுடைய வீட்டின் ஜன்னல்கள் வழியே நீங்கள் இது வரை அடைந்து வந்த வெளிச்சமும் காற்றும் தடைப்பட்டுத் தான் போகும். அவர் சுவர் கட்டாமல், அதாவது உங்களுடைய ஜன்னல்கள் வழியே உங்களுக்கு இது காறும் கிடைத்து வந்த நல்ல வெளிச்சத்தையும் காற்றையும் அவர் தடுக்காமல், அவரைத் தடை செய்ய உங்களுக்கு சட்டப்படி உரிமை உண்டா? நீங்கள் இது வரை இவ்வசதிகளை அனுபவித்து வந்தீர்களென்பது சரி; ஆனால் அவர் என்ன தவறு செய்கிறார்? உங்கள் பூமியில் அவர் சுவர் எழுப்பவில்லையே; அவருடைய பூமியில் தானே அவர் கட்டிக் கொள்ளுகிறார். தர்ம சங்கடமான நிலைமை.

இத்தரும சங்கடமான நிலைமையைச் சட்டம் ஒரு தினுசாகச் சமாளித்து விட்டது. நீங்கள், உங்களுடைய வீடு அல்லது கட்டடத்திலிருக்கும் ஜன்னல் வழியாகப் பக்க வட்டாரத்திலிருக்கும் வெளிச்சத்தையும் காற்றையும் ஆட்சேபணையில்லாமல் அமைதியாக இருபது ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவித்திருந்தீர்களானால், அதை அப்படியே இனியும் அனுபவிக்க உங்களுக்குச் சட்டபூர்வமான ஒரு உரிமை ஏற்பட்டு விடுகின்றது. இதற்கு ஆங்கிலத்தில் 'ஈஸ்மெண்ட்' (Easement) என்று பெயர். அதாவது ஒரு சொத்தின் உபயோகத்திற்காக வேறு சொத்தின் உரிமைகள் குறைக்கப்படுகின்றன. பக்கத்து நிலக்காரருக்கு அவருடைய பூமியில் எங்கே வேண்டுமானாலும் சுவர் எழுப்பக் கூடும் என்று இருக்கும் சாதாரண உரிமையானது இச்சந்தர்ப்பத்தில் உங்கள் வீட்டின் வசதிகளைக் காப்பாற்றுவதற்காக, மறைந்து விட்டது. அவர் சுவர் எழுப்பலாம்; ஆனால் உங்களுடைய இருபது வருட அனுபவத்தால் பக்குவமடைந்த உங்கள் வசதிகளைத் தடுக்கா வண்ணமும் குறைக்கா வண்ணமும்தான் அவர் சுவர் எழுப்பலாம். உதாரணமாக: உங்கள் ஜன்னல்களுக்கு அதே விதம் காற்று வெளிச்சம் இவை குறையாமல் வரக் கொஞ்சம் இடைவெளி

வீட்டு அப்பால் அவர் சுவர் கட்டிக் கொள்ளலாம்.

ஆனால் நீங்கள் மேற்கண்ட வசதிகளை இருபது ஆண்டுகளுக்குக் குறைவாகவே அனுபவித்து வந்திருந்தால், உங்களுக்குச் சட்ட பூர்வமான உரிமை ஒன்றும் இன்னும் ஏற்படவில்லை. அதற்குள், உங்கள் வசதிகளை பக்கத்து நிலக்காரர் குறைத்து, உங்களுக்கு வந்துகொண்டிருக்கும் காற்று வெளிச்சத்தைத் தடுத்து அவர் சுவர் எழுப்பினாலும் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. இது தான் சட்டம்.

பிரஸ்தாப வழக்கில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. மல்லய்யா என்பவர் 1930ல் ஒரு கடையும் கட்டமும் கட்டினார். மாடியில் இரண்டு ஜன்னல்கள் வழியாக பக்கத்துப் பூமியிலிருந்து அவருக்குக் காற்று வெளிச்சம் வந்து கொண்டிருந்தன. இப்பக்கத்து நிலமானது சர்க்கார் புறம் போக்கு. ஒரு தனி நபருக்கும் சொந்தமில்லை. இந்த நிலத்தை மொய்தீன் குன்னி என்பவர் ஆக்கிரமித்துக் கொண்டு அங்கே ஒரு ஹோட்டல் கட்டினார். இது 1944க்கு முந்தியே. மல்லய்யாவின் கட்டடத்தின் இரு ஜன்னல்கள் வழியாக அவருக்குக் கிடைத்து வந்த நல்ல காற்றும் வெளிச்சமும் போய், பக்கத்து ஹோட்டலிருந்து சமையில் அடுப்புப் புகை நுழைய ஆரம்பித்தது. மல்லய்யா கோர்ட்டுக்குப் போனார். தம்முடைய ஜன்னல்களுக்குத் தடையாக இருக்கும் ஹோட்டல்காரருடைய சுவர், கூறை, இவற்றை இடித்து விடவேண்டு மென்றும், தமக்குக் கிடைத்து வந்த நல்லகாற்றுக்கும் வெளிச்சத்திற்கும் இனி ஹோட்டல்காரர் யாதொரு தடையும் செய்யக்கூடாதென உத்தரவு பிறப்பிக்க வேண்டு மென்றும் தாவாவில் கேட்டிருந்தார். ஹோட்டல்காரர் கட்சி சொன்னார். அதாவது மல்லய்யா தம்முடைய கட்டடம் கட்டியே இருபது வருடங்கள் ஆகவில்லை என்றும் இருபது வருடங்களுக்குக் குறைவாகக் காற்று வெளிச்ச வசதிகளை அனுபவித்து வந்த மல்லய்யாவுக்குச் சட்ட பூர்வமான உரிமை ஒன்றும் இன்னும் ஏற்படவில்லை என்றும், ஆகையால் தாம் கட்டிய ஹோட்டல் சுவர் கூறை இவைகளை இடிக்கும்படி அவர் கேட்க முடியாதென்றும் அவர் கட்சி சொன்னார்.

ஜில்லா முன்சீப்பும் சரி, அப்பீலில் சப் ஜட்ஜும் சரி, இரண்டாவது அப்பீலில் சென்னை ஹைகோர்ட்டும் சரி ஹோட்டல் கட்டியவருடைய இக்கட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை.

வித்தியாசம் இதுதான். ஹோட்டல் கட்டியவர் அப்பூமியின் சொந்தக்காரருமில்லை; சொந்தக்காரருடைய அனுமதி பெற்றவருமில்லை. அவர் வேறு ஒருவருடைய பூமியில், அதாவது சர்க்கார் பூமியில், துராகிருதமாகப் பிரவேசித்தவர். துராகிருதமாகப் பிரவேசித்தவர்களுக்குச் சட்டம் வேறு. மல்லய்யா தம்முடைய கட்டடத்தின் ஜன்னல்கள் வழியே காற்று வெளிச்சத்தை அடைந்து வர அவருக்கு ஒரு இயற்கை உரிமையும் (Natural Right) இருக்கிறது. இருபது வருடங்கள் அனுபவிக்காமலே இந்த இயற்கை உரிமை உண்டு. ஆனால் அடுத்த பூமியின் சொந்தக்காரர் சம்பந்தப்பட்டவரையில் இந்த இயற்கை உரிமை உபயோகப்படமாட்டாது. அதாவது குறைந்தது இருபது வருட அனுபவத்தால்தான் இந்த வசதிகளை அடுத்த நிலத்தின் சொந்தக்காரர் சம்பந்தப்பட்ட வரையில் மல்லய்யா வற்புறுத்த முடியும். ஆனால் துராகிருதமாக அடுத்த நிலத்தில் பிரவேசிப்பவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இருபது வருடங்கள் முடிவடையாமலிருந்தாலும் பாதகமில்லை. காற்று வெளிச்சம் சம்பந்தப்பட்ட ஒருவருடைய இயற்கை உரிமைகளை, பக்கத்துச் சொத்தில் பாத்தியமில்லாத ஒருவர் எப்பொழுதும் தடை செய்யக் கூடாது. மல்லய்யா, கடைகட்டி, இருபது வருடங்கள் ஆகாவிட்டாலும் அவர் அடைந்து வந்த இந்த இயற்கை வசதிகளை, யாரோ பாத்தியமில்லாத வழியில் போகும் ஒருவர் தடை செய்ய முடியாது; அப்படித் தடை செய்யச் சட்டம் இடங் கொடுக்காதென உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, புதிதாகக் கட்டிய ஹோட்டல் கட்டடத்தை இடித்து விடும்படி கீழ்க் கோர்ட்டுகள் இரண்டும் செய்த தீர்ப்பை உயர்நீதிபதி அவர்கள் உறுதி செய்தனர்.

கிரயம் செய்தவர் கிரய சொத்திலிருந்த ஜப்தியை நீக்குவதற்காக ரூ. 500 வைத்துக் கொண்டார். ஆனால் அவர் அதைக் கொடுக்கவில்லை பிறகு நஷ்ட ஈடு ரூ. 9500-ம் இரண்டு கோர்ட் செலவுகளையும் கொடுத்தார்.

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—மதராஸ்-529—நீதிபதிகள் மாக்கும் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும்.]

சீதை அம்மாளுக்கு 2 ஏகர் 84 செண்டு புஞ்சை நிலம் சொந்தமாக இருந்தது. அவள் சுப்பம்மாள் என்பவளுக்கு ரூ. 500 கடன் கொடுக்க வேண்டியதாக இருந்தது. சுப்பம்மாள் தாவா செய்தாள். மேற்கண்ட சொத்தை அறிக்கை ஜப்தியும் செய்தாள். அப்படி இருக்கும் போது அச்சொத்தை சீதை அம்மாள் 24-6-1932-ல் ரூ. 1250க்கு வெங்கடசாமி என்பவருக்கு விற்ருள். இச்சொத்தை வாங்கிய வெங்கடசாமி அதை 15—9—1933-ல் ரூ. 1200க்கு வெங்கய்யா என்பவருக்கு விற்று விட்டார். இதற்குள் சுப்பம்மாளுடைய தாவாவில் டிக்ரி ஏற்பட்டு விட்டது. அந்த டிக்ரித் தொகையைத் தாமே கொடுத்துத் தீர்த்து ஜப்தியிலிருந்து கிரய சொத்தை வீடுவித்துக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு அக்கிரயத் தொகையில் ரூ. 500-ஐ வெங்கடசாமி பெற்றுக் கொண்டார். ஆனால் அவர் அத்தொகையைக் கொடுத்து டிக்ரியைத் தீர்க்காமல் கோர்ட்டில் ஏதோ பாத்திய மனுக்கள் போட்டு ஹைகோர்ட் வரையில் தப்புக் கட்சி ஆடிக் கொண்டே இருந்தார். அவருடைய கட்சிகள் ஒரு கோர்ட்டிலும் பலிக்கவில்லை. கடைசியாக அச்சொத்து மேற்கண்ட டிக்ரிக் கடனுக்காக 9-11-1936-ல் கோர்ட்டால் ஏலம் போடப்பட்டது. கோர்ட் ஏலம் எடுத்தவர் முதலில் அச்சொத்தை ஒப்படைப்பாக வசப் படுத்திக் கொண்டார். ஏனென்ருல் 1941 ஆம் வருடம் வரையில் அச்சொத்தைக் குத்தகைக்கு அனுபவிக்கும் பாத்தியம் ஒன்று சொத்து வாங்கியவருக்கே இருந்தது. அக்குத்தகைக் கெடு முடிந்தவுடன் கோர்ட் ஏலம் எடுத்தவர் தாம் ஏலம் எடுத்த சொத்தானது தமக்குச் சுவாதீனமாக வேண்டு மென்று வெங்கய்யா மீது நடவடிக்கை எடுத்து 22-3-1947-ல் சொத்தையும் அவரிடமிருந்து சுவாதீனம் செய்து கொண்டார். அதாவது வெங்கடசாமியிடம் அச்சொத்தைக் கிரயம் வாங்கிய வெங்கய்யாவானவர் அச்சொத்துக்களை 22-3-1947 தினம் சுவாதீனம் இழந்தார். வெங்கய்யா உடனே தமக்கு அச்சொத்தைக் கிரயம் செய்து கொடுத்த வெங்கடசாமி மீது நஷ்ட ஈடு தாவா தொடர்ந்தார். இத்தாவாவில் தமக்கு அச்சொத்தின் அப்போதைய மதிப்பான ரூ. 9500 நஷ்டம் கிடைக்க வேண்டு மென்று கேட்டிருந்தார். தாவா தொடர்ந்த தேதி 11-4-1947.

இத்தாவாவுக்குக் கிரயம் செய்த வெங்கடசாமி மூன்று கட்சிகள் சொன்ஞர். அக்கட்சிகளாவன:—(1) இந்த நஷ்டத்திற்கு நான் ஜாவாப்தாரி அல்ல. என்ஞல் ஏதாவது கலன்கள் ஏற்படுத்தப்பட்டிருந்து அதஞல் கிரயம் பெற்றவருக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் தான் நான் நஷ்ட ஈடு செய்வதாகக் கிரயப் பத்திரத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறேன். என்ஞல் ஏற்பட்ட கலனுக்காக இப்போது கிரய சொத்து இழக்கப்பட வீல்லை. ஆகையால் நான் நஷ்ட ஈடு கொடுக்கக் கடமைப் பட்டவனல்ல. (2) நான் கிரயம் செய்து கொடுத்த தேதி 15-9-1933. கிரய சொத்து கோர்ட் ஏலத்தில் போனதேதி 9-11-1936. இத்தாவா தொடரப்பட்டது 11-4-1947-ல் தான். ஆகையால் இத்தாவாவில் கேட்கப்படும் பரிகாரமானது காலாவதியாகி விட்டது. (3) நான் சொத்தை விற்றதே ரூ. 1200க்குத் தான். வாதிக்கு எப்படி ரூ. 9500 நஷ்ட ஈடு கிடைக்கும்? என்பவை தான் வெங்கடசாமியின் கட்சிகள்.

முதல் கோர்ட்டிலும் சரி, அப்பீலில் சென்னை ஹைகோர்ட்டிலும் சரி இக்கட்சிகள் மூன்றும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. (1) முதல் கட்சி சம்பந்தப்பட்ட வரையில் சட்டம் இது தான். கிரயம் செய்து கொடுப்பவர் எவருக்கும் ஒரு பொறுப்பு உண்டு. அவர் எழுதிக் கொடுக்கும் கிரய சாசனத்தில் இதைப்பற்றி ஒன்றும் சொல்லாமலிருந்தால் கூட அந்தப் பொறுப்பு உண்டு. அதாவது "நான் உங்களுக்குக் கிரயம் செய்து கொடுக்கும் இச் சொத்தானது எனக்குச்

சொந்தமானது; அதைக் கிரயம் செய்ய எனக்கு உரிமை உண்டு; இச் சொத்தைக் கிரயம் வாங்கும் நீங்கள் இதை நிராட்சே பனையாக அனுபவித்து வரலாம்"—என்று ஒரு உறுதி சொல்லி அதன் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்ளுவது போலத்தான். மேலே கண்ட உறுதிச் சொற்கள் தவருக இருந்தால், அதனுல் அச்சொத்தைக் கிரயம் வாங்கியவருக்கு ஏற்படும் நஷ்டத்தைக் கிரயம் செய்தவர் ஈடு செய்து கொடுக்க வேண்டியது தான் சட்டம். வியக்தமாக அவ்விதப் பொறுப்பு கிடையாதென்று குறிப்பிடப் பட்டிருந்தாலொழிய, அப்பொறுப்பைக் கிரயம் செய்பவர் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்பது தான் சட்டம். பிரஸ்தாப வழக்கில் ஏற்பட்ட கிரயத்திற்கு முன்பே அது ஜப்தி செய்யப்பட்டிருந்தது. ஜப்தியை நீக்கிக் கொடுக்க வேண்டிய கடமை சொத்தைக் கிரயம் செய்தவருடையது. அவர் அதைச் செய்யவில்லை. அதனுல் சொத்தின் பாத்தியமும் சுவாதீனமும் அவரிடம் கிரயம் பெற்றவரிடமிருந்து கோர்ட் ஏலம் எடுத்த ஒருவருக்குப் போய் விட்டன. அதனுல் ஏற்படும் நஷ்டத்திற்குச் சட்டப்படி கிரயம் செய்து கொடுத்தவர்தான் ஈடு செய்ய வேண்டு மென்றும் (2) காலாவதி சம்பந்தப் பட்ட வரையில்—வாதி சொத்தின் சுவாதீனத்தை இழந்தது 22-3-1947-ல் தான். அதிலிருந்து 6 வருடங்களுக்குள் தாவா செய்யலாம் என்றும் இத்தாவா அதற்குள் செய்யப்பட்டிருப்பதால் அதற்குக் காலாவதி இல்லை என்றும் (3) தாவா தேதியில் அக்கிரய சொத்துக்களின் மதிப்பு எவ்வளவோ அதையே நஷ்ட ஈடாகக் கேட்க வாதிக்கு உரிமை இருக்கிற தென்றும், பிரஸ்தாப வழக்கில் வாதி தாவா செய்த தேதியில் அச்சொத்தானது ரூ. 9500 பெறுமானமுள்ளதாக இருந்தமையால் அத் தொகையைத் தான் கிரயம் செய்தவர் நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டு மென்றும்—உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்தனர். அத்துடன் கிரயம் செய்து கொடுத்தவர் எல்லாக் கோர்ட்டுச் செலவுகளையும் கொடுக்கும்படி டிக்ரி ஏற்பட்டது. நஷ்ட ஈடு சம்பந்தப்பட்ட வரையில் தாம் கொடுத்த கிரயத் தொகையை வட்டியுடன் வாதி கேட்டாலும் கேட்கலாம்; அல்லது தாவாத் தேதியில் சொத்தின் பெறுமானம் எவ்வளவோ அதையே நஷ்ட ஈடாகக் கேட்டாலும் கேட்கலாம்; அது சொத்தை இழந்த வாதியின் இஷ்டம் என்றும் நீதிபதிகள் இவ்வழக்கில் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

அர்ச்சகர்களிடமிருக்கும் நிலங்கள் - சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு.

[ஆதாரம்:—1953 (1) மதராஸ் லா ஜர்னல்—397. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு.]

அர்ச்சகர்களிடம் வெகுகாலமாக இருந்து வரும் நிலங்களைப்பற்றிய ஒரு முக்கியமான தீர்ப்பு சுப்ரீம் கோர்ட்டால் அளிக்கப்பட்டிருக்கிறது. கோடிப்பள்ளி ஸ்ரீ சோமசேகரஸ்வாமி கோயிலின் எக்சிகூடிவ் ஆபீசரால் இத்தாவா தொடரப்பட்டது. அக்கோயிலுக்குச் சொந்தமான 93 ஏகர் 33 செண்டு நிலங்களைப் பிரதிவாதிகளிடமிருந்து கோயிலுக்காகச் சுவாதீனம் செய்துகொள்ளவே இத்தாவா. அந்நிலங்களை அனுபவித்து வந்த அர்ச்சகர்களின்மீதும் அவர்களிடம் அந்நிலங்களைக் குத்தகைக்கு ஒப்புக்கொண்டவர்களின்மீது தான் தாவா தொடரப்பட்டது. அர்ச்சகர்களால் மூன்று கட்சிகள் சொல்லப்பட்டன. அவையாவன:—(1) "இந்த நிலங்கள் எங்கள் முன்னோர்கள் வசமும் பிறகு எங்கள் வசமும் சுமார் 150 வருடங்களுக்கு அதிகமான காலமாக இருந்து வருவதில் எங்களுக்கு ஆரம்பத்தில் ஏதோ சட்ட பூர்வமான பாத்தியத்தால்தான் இவை கிடைத்தன என்றும், அப்பாத்தியம் என்ன என்று காண்பிக்கக் கூடிய தஸ்தாவேஜுகள் கெட்டுப்போய் விட்டதாகவும் ஊகித்துக் கொள்ள வேண்டியது தான் சட்டம்." (Principle of a lost Grant) (2) அப்படியே இந்நிலங்கள் கோயிலுக்கே கொடுக்கப்பட்டிருந்தாலும், கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது மேல்வார பாத்தியம்மட்டில்தான்; குடிவார பாத்தியம் எங்களிடமேதான் எப்போதும் இருந்து வருகிறது. (3) "மேலேகண்ட இரண்டு சட்டக் கட்சிகளும் எங்களுக்கு விரோதமானலும், நாங்களே நிலத்தை

எப்போதும் போலவே அனுபவித்து வந்து அதன் வருமானத்திலிருந்து கோயி லின் நித்திய நைவேத்திய தீபாராதனைச் செலவுகளைச் செய்யவேண்டியதுதான் நியாயமான ஏற்பாடாகும்”—இம்மூன்று கட்சிகளும் சப்கோர்ட்டிலும், ஹைகோர்ட் டிலும், கடைசியாக சுப்ரீம் கோர்ட்டிலும் அர்ச்சகர்களுக்கு விரோதமாகவே முடிந் தன. யாதொரு தஸ்தவேஜுகளும் இல் லாமல் நீண்ட காலமாக ஒரு சொத்தை அனுபவிப்பவர் சம்பந்தமாகத்தான் அவ ருக்கு ஆரம்பத்தில் ஏதோ சட்டபூர்வ மான பாத்தியம் இருந்ததெனச் சட்டத் தால் ஊகிக்கலாமே ஒழிய, தஸ்தவேஜு கள் இருக்கும்போது அவ்விதம் ஊகிக்க முடியாதென்றும்; பிரஸ்தாப வழக்கில் தாகல் செய்யப்பட்ட இனும் ரிஜிஸ்டர் நகலில் தாவா நிலங்கள் கோயிலுக்குத் தான் கொடுக்கப்பட்டன என்று இருக்கி றதே ஒழிய அர்ச்சகர்களுக்குக் கொடுக்கப் படவில்லை என்றும்; மேலும் அந்தத் தஸ்த வேஜுவிலிருந்து கோயிலுக்குக் கொடுக்கப் பட்டது மேல்வார பாத்தியம் மட்டும் என்று சொல்ல முடியாதென்றும் சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர். கடைசிக் கட்சி சம்பந்தப்பட்ட வரையில், நிலங்களைச் சுவாதீனம் கேட்கும் தாவா வில் அவ்விதமான பரிகாரங்களை அளிக்கக் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என்றும்; கோயிலுக்கு 'ஸ்கீம்' ஏற்படுத்தவேண்டு மென்று நடக்கும் நடவடிக்கைகளில்தான் சட்டப்படி இல்லாவிட்டாலும் அவ்வித நியாய ஏற்பாடுகளை, அதாவது பூஜை முத லியவற்றிற்குத் தேவையான கோயில் நிலங்களை அர்ச்சகர்களிடமே விட்டு வைக் கும்படியான ஏற்பாடுகளைச் செய்வது சாத்தியமாகுமென்றும் சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு, நிலங்கள் ஜாடாவும் கோயிலுக்குச் சுவாதீனமாகும்படி தீர்ப் பளித்தனர்.

'ஒத்தபடி' கையெழுத்தை மட்டில் ஆதாரமாக வைத்துத் தாவா செய்யலாமா?

[ஆதாரம்:—*1953* (*1*) மதராஸ் லா ஜர்னல்–*725.*]

வாதி பிரதிவாதிகளுக்குள் பற்று வரவு நடந்து வந்தன. வாதிகளின் கணக்கில் பிரதிவாதிகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் பேரேட்டில் (Ledger) *3-9-1949*ல் பிரதி வாதிகள் 'ஒத்தபடி' கையெழுத்துச் செய்திருந்தனர். அதாவது அன்று வரை ஒருவருக்கொருவர் பற்று வரவு தொகை களைக் கணக்குப் பார்த்து ஈடு செய்து கொண்டு வாதிக்குப் பிரதிவாதிகள் ரூ. 34,000 கொடுக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொண்டு அக்கணக்கின் கீழ், பிரதி வாதிகள் கையெழுத்துச் செய்திருந்தனர். இந்த 'ஒத்தபடி'யை ஆதாரமாக வைத்து வாதி, பிரதி வாதிகளின் மீது தாவா செய்தார். பிரதி வாதிகள் 'ஒத்தபடி' கையெழுத்து மட்டில் தங்களுடைய தென்று ஒப்புக்கொண்டார்களே ஒழிய, தாங்கள் கணக்கு வழக்குப் பார்க்கவில்லை என்றும் உண்மையில் ரூ. 15000 அல்லது 16,000க்கு மேல் தாங்கள் கொடுக்க வேண்டியதில்லை என்றும் கட்சியாடினர். பிரதிவாதிகளும் கணக்குகள் வைத்துக் கொண்டிருந்தாலும், அவற்றை கோர்ட் டில் அவர்கள் தாகல் செய்யவில்லை. 'ஒத்தபடி' என்பது கடனைக் கொடுப்ப தான ஒப்பந்தமல்ல; ஏற்கனவே கொடுக்க வேண்டியதை ஒப்புக்கொள்ளுவது தான் ஒத்தபடி; ஆகையால் உண்மையில் நடந்த பற்று வரவுகளை வாதி ருசுசெய்து உண்மையில் பிரதிவாதிகள் கொடுக்க வேண்டிய தொகைகளுக்குப் பிராது செய்யலாமே ஒழிய, ஒத்தபடி அல்லது ஒப்புக்கொள்ளுதலை மட்டில் வியாஜ்ய மூலமாக வைத்து தாவா செய்ய முடியா தென்றும்; தாங்கள் கணக்குகளைத் தாகல் செய்யாமலிருந்தாலும் வாதி தான் பற்று வரவுகளை ருசுப்பிக்க வேண்டுமென்றும் பிரதிவாதிகள் கட்சியாடினர். இவ்வழக்கு சுப்ரீம் கோர்ட்வரை போயிற்று. சுப்ரீம் கோர்ட்டார் பிரதி வாதிகளின் இரண்டு கட்சிகளையும் ஏற்றுக்கொள்ள வில்லை. (*1*) பற்று வரவு கணக்குகள் எழுதப்பட் டிருப்பதை ஒட்டியே அக்கணக்குகள் எழுதப்பட்டிருப்பதன் கீழே, யாதொரு நிபந்தனை அல்லது ஆட்சேபனையில்லாமல் தாம் எவ்வளவு பாக்கி கொடுக்கவேண்டு

மென்று ஒருவர் ஒப்புக்கொண்டு 'ஒத்தபடி' கையெழுத்துச் செய்திருந்தால், அதை ஆதாரமாக வைத்தே அவர் மீது தாவா செய்யலாம். அவ்வித 'ஒத்தபடி' அல்லது ஒப்புக்கொள்ளுதலே சரியான வியாஜ்ய மூலமாகுமென்றும் (2) கோர்ட்டில் முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம் சம்பந்தமாகத் தம்முடைய வசமுள்ள கணக்கு வழக்கு தஸ்தாவேஜு முதலிய ருசுக்களை ஒரு கட்சிக்காரர் கோர்ட்டில் தாகல் செய்யாமல், 'அவ் விஷயத்தைச் சட்டபடி எதிர் கட்சிதான் ருசுப்பிக்கவேண்டும்' என்று சும்மா இருப்பது ஒரு நிந்திக்கத் தக்க பழக்கமாகுமென்றும் சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு வாதிக்குத் தீர்ப்பளித்தனர்.

நம்பிக்கைத் துரோகத்தைச் சட்டம் அனுமதிக்கவில்லை

[ஆதாரம்:—1953 (2) மதராஸ் லா ஜர்னல் 17.]

ஒரு சொத்தின் பேரில் அடமானம் ஒன்று இருந்தது. பிறகு அச்சொத்தின் சொந்தக்காரர் அதே சொத்தை வேறு ஒருவருக்கு ஒத்தி வைத்துக் கடன் வாங்கினர். முதலில் ஏற்பட்ட அடமானத் தொகையை ஒத்திதாரே கொடுத்துத் தீர்த்துக் கொள்ளும்படி ஒத்திப்பத்திரத்தில் சாட்டுதல் போடப்பட்டு அதற்கான தொகையும் ஒத்திதாரிடமே நிறுத்தப் பட்டது. ஒத்திதார் தாம் ஒப்புக்கொண்டபடி முதல் அடமானக் கடனைத் தீர்க்க வில்லை. ஆகையால் முதல் அடமானதார் தமக்குத் தொகை கிடைக்க கோர்ட்டில் தாவாசெய்தார். டிக்ரி ஏற்பட்டது. அடமான சொத்தானது கோர்ட்டால் ஏலம் போடப்பட்டது. அந்த ஏலத்தில் அச் சொத்தை ஒத்திதாரே ஏலம் எடுத்தார். ஏலத் தொகையிலிருந்து முதல் அடமான தாருடைய டிக்ரித் தொகை கொடுக்கப்பட்டது; பாக்கி இருக்கும் தொகையை ஒத்திதாரே தம்முடைய ஒத்திக் கடனின் ஒரு பாகத்திற்காகக் கோர்ட்டிலிருந்து பெற்றுக் கொண்டார். சுலபமாகத் தாமே அச்சொத்தின் சொந்தக் காரராகி விட்டதாக கோர்ட் ஏலத்தில் அச்சொத்தை வாங்கிய ஒத்திதார் நினைத்துக்கொண்டிருந்தார். அவ்விதம் ஒத்திதார் லாப மடையமுடியாதென்பதை சென்னை ஹைகோர்ட் உயர் நீதிபதிகள் சமீபத்தில் தீர்ப்பளித்த ஒரு வழக்கில் எடுத்துக்காட்டி இருக்கின்றனர். நம்பிக்கை ஏற்பாடுகளைப் பற்றிய 'டிரஸ்டு ஆக்ட்' என்ற சட்டத்தின் செக்ஷன் 90 ஐ ஆதாரமாக வைத்து நீதிபதிகள் அவ்விதம் தீர்ப்பளித்தனர். ஒத்திதார், அடமானதார், பல பாத்தியஸ்தர்களில் ஒருவர், அல்லது ஆயுள் குத்தகைதார் முதலியவர்கள், தங்களுடைய நிலைமையைப் பயன் படுத்திக் கொண்டு அதன் மூலம் அச்சொத்து சம்பந்தமாக ஒரு லாபத்தை அடைந்தால், அந்த லாபமானது அச் சொத்தின் மற்றப் பாத்தியஸ்தர்களுடைய நன்மைக்காகவே அவர் அடைந்திருக்கிறுர் என்று பாவிக்கப் படும்—என்பது தான் செக்ஷன் 90. இவ்வழக்கில், முதல் அடமானத்தைத் தீர்க்கவேண்டியவர் ஒத்திதார். அவர் அதைத் தீர்க்கவில்லை. அவருடைய தவறுதலால் தான் அச்சொத்து கோர்ட் ஏலம் போயிற்று. அதை ஒத்திதாரே பயன் படுத்திக் கொண்டார். அதாவது கோர்ட் ஏலத்தில் தாமே அச்சொத்துக்களை வாங்கிவிட்டார். சொத்தை வாங்கிய லாபத்தை அவர் சட்டப்படி அடைய முடியாது. சொத்தின் சுவான்தாருக் காகவேதான் அவர் அதை வாங்கியதாகச் சட்டத்தில் ஏற்படும். ஆகையால் அவர் எப்போதும் போல் ஒத்திதாராகவே தான் இருப்பார். அவருக்குச் சேர வேண்டிய ஒத்தித் தொகையையும், மற்ற அவசியமான தொகைகளையும் கொடுத்து சுவான்தார் சொத்தை மீட்டுக் கொள்ள லாம். நம்பிக்கைத் துரோகம் செய்வதைச் சட்டம் அனுமதிக்கவில்லை.

சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் — 1950

[The Madras Village Panchayats Act—1950. **1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]**

[சென்ற மாத இதழில் கட்டடங்களுக்கு நம்பர் போடுவது பற்றியும், லைசென்சு, பர்மிட் இவைகளைப் பற்றியும் பஞ்சாயத்திற்குள்ள அதிகாரங்களைக் குறிப்பிடும் பஞ்சாயத்துச் சட்ட ஷரத்துக்கள் விளக்கப்பட்டன. இனி காலாவதி, தாவா செய்வது, பிராசிகூஷன் செய்வது முதலிய விஷயங்களைப் பற்றி பஞ்சாயத்துச் சட்டத்திலிருக்கும் ஷரத்துக்களை கவனிப்போம்.]

பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய கட்டணங்களை வசூல் செய்வதற்கு காலாவதி

செக்ஷன் 102

இச்சட்டப்படியோ, அல்லது இச்சட்டத்தை அனுசரித்து செய்யப்பட்டிருக்கும் விதிகளின்படியோ, உப விதிகளின் படியோ அல்லது ரெகுலேஷன் அல்லது உத்தரவின்படியோ பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய வரிகளையோ அல்லது வேறு தொகைகளையோ வசூல் செய்ய ஜப்தியோ, அல்லது தாவாவோ, அல்லது அவை சம்பந்தமான கிரிமினல் வழக்கோ எதுவும் மூன்று வருடங்களுக்குப் பிறகு செய்யவும் ஆரம்பிக்கவும் கூடாது. அதாவது முதல் முதல் என்று தினம் ஜப்தி செய்யலாமோ, அல்லது தாவா போடலாமோ, அல்லது கிரிமினல் வழக்குத் தொடரலாமோ அத் தினத்திலிருந்து மேற்கண்ட மூன்று வருட கெடுவை கணக்குச் செய்யவேண்டும்.

யார் கிரிமினல் வழக்குத் தொடரலாம்

செக்ஷன் 103

இச் சட்டத்தில் வேறு விதமாக வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் தவிர, மற்றபடி இச்சட்ட ஷரத்துக்களையோ, விதிகளையோ, உப விதிகளையோ மீறிய குற்றத்திற்காக போலீசாராலோ, அல்லது பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியாலோ, அல்லது பஞ்சாயத்தாலோ நிர்வாக அதிகாரியாலோ இதற்காக என்று அதிகாரம் கொடுக்கப்பட்ட ஒருவராலோ, குற்றம் ஏற்பட்ட மூன்று மாதங்களுக்குள் பிராது (கம்பிளெயிண்ட்) கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, அவ்வழக்கு விசாரிக்கப் படமாட்டாது. ஆனால் கிரிமினல் வழக்கு முறைச் சட்டப்படி, தகவல் கிடைத்த தன் பேரிலோ, தமக்கே நேரில் தெரிந்ததாலோ, அல்லது சந்தேகத்தின் பேரிலோ குற்றங்களைப் பற்றி விசாரணை செய்ய மாஜிஸ்ட் ரேட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் இந்த ஷரத்தினால் பாதிக்கப்பட மாட்டாது. மேலும் ஒருவர் லைசென்சோ பர்மிட்டோ வாங்கிக்கொள்ளவில்லை என்ற குற்றம் சம்பந்தப்பட்ட வரையில் எந்த கெடுவரை லைசென்சு அல்லது பர்மிட் வாங்கிக்கொள்ள வேண்டுமோ அது வரை அக்குற்றம் நீடித்து புரியப்படுவதாக பாவிக்கப்படும். அப்படி கெடு ஒன்றுமில்லாவிட்டால், குற்றம் முதலில் செய்யப்பட்ட தேதியிலிருந்து 12 மாதங்களுக்குள் 'கம்பிளெயிண்ட்' கொடுக்கப்படலாம்.

சில குற்றங்களைப் பற்றி ராஜி செய்து கொள்ளலாம்

விதிகளால் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் மேன்பார்வைக்கும் உட்பட்டு, இச் சட்டம் அல்லது விதிகளை மீறியதாக எந்தக் குற்றங்களைப் பொறுத்து ராஜி செய்து கொள்ளலாமென்று விதிகளால் நிர்ணயம் செய்யப்படுகிறதோ அக் குற்றங்களைப் பற்றி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி ராஜி செய்து கொள்ளலாம்.

செக்ஷன் 104

இந்த செக்ஷனில் கண்ட அதிகாரத்தை உபயோகித்து எந்த எந்தக் குற்றங்களைப் பற்றி மேற்கண்ட ராஜி செய்து கொள்ளலாமென்று சென்னை சர்க்காரால் கீழே கண்டபடி விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் பிரதேச இன்ஸ்பெக்டருடைய (ரீஜனல் இன்ஸ்பெக்டர்) முன் அனுமதி வாங்கிக் கொண்டு தான் ராஜி செய்து கொள்ளலாம். மேலும் சில குற்றங்கள் சம்பந்தப்பட்ட வரையில், எந்த கோர்ட்டில் கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதோ அக்கோர்ட்டின் அனுமதியும் பெற்றால் தான் ராஜி செய்து கொள்ள முடியும். ராஜி செய்துகொள்ளக் கூடிய குற்றங்களின் ஜாப்தா:—

அறிக்கை 32
27-3-1951
சென்னை சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட் பாகம் IA பக்கம் 69.

பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன்.	என்ன குற்றம்.	தண்டனை.	ராஜி செய்து கொள்ளலாமா; கோர்ட்டு அனுமதி வேண்டுமா.
(1)	(2)	(3)	(4)
79 (a)	பொது ரஸ்தாவில் சட்ட விரோதமாக சுவர் கட்டுவது வேலி அடைப்பது.	அபராதம் ரூ. 100.	ராஜி செய்து கொள்ளலாம்.
79 (c)	பொது ரஸ்தாவின் அருகாமையில் பள்ளம் தோண்டி மண் எடுப்பது.	ரூ. 50.	ஷை
79 (d)	சாக்கடை மீது சட்ட விரோதமாக கட்டடம் கட்டுவது.	ரூ. 200.	கோர்ட்டின் அனுமதி பேரில் ராஜி செய்து கொள்ளலாம்.
81 (1)	புதிதாக சொந்தமார்கெட் ஏற்படுத்துவது; லைசென்சு வாங்காமலோ, அல்லது லைசென்சுக்கு முரணாகவோ சொந்த மார்க்கெட்டை நடத்துவது.	ரூ. 500.	ராஜி செய்து கொள்ளலாம்.
82 (3)	சர்டிபிகேட் இல்லாமல் சொந்த மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்வது.	ரூ. 100.	ஷை
84	அனுமதி இல்லாமல் பொது மார்க்கெட்டிலோ, சொந்த மார்க்கெட்டிலோ, பிராணிகளையோ வேறு சாமான்களையோ விற்பது, விற்பனைக்காக வைத்திருப்பது.	ரூ. 20.	ஷை

85	தடுக்கப்பட்ட பிறகோ, அல்லது லைசென்சு இல்லாமலோ அல்லது விதிகளுக்கு முரணாகவோ, பொது ரஸ்தாக்களிலும் பொது இடங்களிலும் விற்பனை முதலிய செய்வது.	ரூ. 10.	கோர்ட் அனுமதியின் பேரில் ராஜி செய்து கொள்ளலாம்
87 (b)	பொது ரஸ்தாக்களிலும் இடங்களிலும் தடுக்கப்பட்ட இடத்தை தங்குமிடமாகவோ வண்டி நிற்க இடமாகவோ உபயோகிப்பது.	ரூ. 50.	ஷை
88 (1)	லைசென்சு இல்லாமலோ, லைசென்சில் கண்ட நிபந்தனைகளுக்கு முரணாகவோ புதிதாக சொந்த வண்டிஸ்டாண்டு ஏற்படுத்துவது, அல்லது தொடர்ந்து நடத்துவது.	ரூ. 200.	ஷை
90 (a)	பொது அடியிடங்களுக்கு வெளியே விதிகளுக்கு விரோதமாக ஆடு முதலியவற்றை வெட்டுவது. துண்டாடுவது, தோல் உரிப்பது முதலியவை.	ஷை	ஷை
90 (b)	லைசென்சு இல்லாமலோ, லைசென்சுக்கு முரணாகவோ விற்பனைக்காக ஆடு முதலியவற்றை வெட்டுவது.	ரூ. 20.	ஷை
91	லைசென்சு இல்லாமலோ லைசென்சுக்கு முரணாகவோ குறிப்பிட்ட காரியத்திற்காக ஒரு இடத்தை உபயோகிப்பது.	ரூ. 100.	ராஜி செய்து கொள்ளலாம்.
95 (2)	கட்டடங்களில் போட்டிருக்கும் எண்களை சட்ட விரோதமாக அழிப்பது.	ரூ. 5.	கோர்ட்டின் அனுமதியின் பேரில் ராஜி செய்து கொள்ளலாம்.
9 (3)	எண்களை திரும்ப எழுதும்படி உத்தரவு ஏற்பட்ட பிறகும் அப்படிச் செய்யாமலிருப்பது.	ரூ. 20.	ராஜி செய்து கொள்ளலாம்.

நிர்வாக அதிகாரி ராஜி செய்து கொண்டால் அதைப் பஞ்சாயத்துக்குத் தெரிவிக்க வேண்டும்

நிர்வாக அதிகாரியால் கொடுக்கப்படும் ஒவ்வொரு கிரிமினல் வழக்கைப்பற்றியும், அவர் ராஜி செய்து கொள்ளும் குற்றங்களைப் பற்றியும் அவர் அடுத்த பஞ்சாயத்துக் கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும்.

செக்ஷன் 105

(தொடரும்)

ஆடைகளை அழகு பெறச் செய்வது

~ அன்னகிளி ~

சோப்

—தயாரிப்பவர்—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 22 :: தஞ்சாவூர்

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

புறம்போக்கிலிருக்கும் ஊருணி

138. **கேள்வி:** (பெரியசாமி — சருகணி போஸ்டு) சர்க்கார்புறம் போக்கில் இருக்கும் ஊருணியில் தமக்குமட்டில்தான் பாத்தியமிருக்கிறதென்று ஒருவர் அவருடைய நஞ்சைக்கு மட்டும் தண்ணீர் இறைத்து வருகிறார். மற்ற ரயத்துக்களுக்கு இதில் தண்ணீர் பாத்தியம் உண்டா இல்லையா?

பதில்: அவ்விதம் ஒருவருக்குமட்டில் சட்டப்படி பாத்தியம் ஏற்படலாம்.

பலதாரத் தடைச் சட்டத்தைப் பற்றிய பல சந்தேகங்கள்.

139. **கேள்வி:** (N. கிருஷ்ணசாமி நாயுடு—மேலூர்.) (1) சென்னையிலுள்ள ஒரு இந்துவுக்கு முதல் இரண்டு தாரங்கள் இருக்க மூன்றாவது தாரம் செய்துகொண்டால் குற்றமா? (சட்டத்தில் 'தாரம்' இருக்க, 'தாரம்' செய்தால் குற்றம் என்று ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதால் 'தாரங்கள்' இருக்கத் தாரம் செய்தால் குற்றமா என்பது பன்மைப்பாட்டில் சொல்லவில்லையாகையால் இக் கேள்வி கேட்கப்பட்டது.) (2) மூன்றும் தாரம் செய்து கொண்டவர்மீது முதல் தாரம் பிராது கொடுக்காமல் இரண்டாவது தாரம் மட்டில் பிராது செய்தால் செல்லுமா? (3) கலியாணமான தேதியிலிருந்து எத்தனை நாளுக்குள் பிராது கொடுக்கவேண்டும். காலாவதி தோஷம் என்ன? (4) முஸ்லீம்களுக்கு இதுவிஷயத்தில் சட்டம் ஒரு தினுசாகவும் இந்துக்களுக்கு வேறு தினுசாகவும் இருப்பதால் பாரபட்சம் காண்பிக்கக் கூடிய இச்சட்டம் செல்லாதென நடந்த வழக்கில் ஹை கோர்ட்டின் முடிவான தீர்ப்பு என்ன?

பதில்: (1) அவ்விதம் குயுக்தியாக அர்த்தம் செய்ய முடியாது. சட்டங்களை எப்படி அர்த்தம் செய்துகொள்ளவேண்டுமென்பதைப்பற்றி ஒரு தனிச் சட்டம் இருக்கிறது. சென்னைச் சட்டங்களை அர்த்தம் செய்துகொள்ளுவதுபற்றிய 1891-ஆம் வருடத்திய சென்னைப் பொது ஷரத்துச் சட்டம் (Madras General Clauses Act—*1891*) என்ற சட்டத்தின் செக்ஷன் 3 (35)ன்படி எல்லாச் சென்னைச் சட்டங்களிலும் ஒருமையிலிருக்கும் வார்த்தைகளில் பன்மையும்; பன்மையிலிருக்கும் வார்த்தைகளில் ஒருமையும் அடங்கியவைகளே என்று இருக்கிறது. ஆகையால் 'தாரம் இருக்க' மறுதாரம் மணம் செய்து கொள்ளக் கூடாதென்று இருப்பதை தாரங்கள் இருக்க'—என்றும் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். (2) மூன்றும்தாரம் மணம்செய்து கொண்டவர் மீது இரண்டாம் தாரம் மட்டில் நடவடிக்கை எடுக்கலாம். (3) காலாவதி

ஒன்றும் கிடையாது. (4) இது பாரபட்சம் காண்பிக்கும் சட்டமல்ல என்றும் ஆகையால் இச்சட்டம் செல்லும் எனவும் சென்னை ஹைகோர்ட்டார் தீர்ப்பளித்து விட்டனர். *(1951 (2)* மதராஸ் லா ஜர்னல் *649*—உயர்நீதிபதி சத்திய நாராயண ராவ் அவர்களும் உயர் நீதிபதி ராஜகோபாலன் அவர்களும் அளித்த தீர்ப்பு.)

பஞ்சாயத்தில் வீட்டு வரி

140. **கேள்வி**: (ராமலிங்கம் — பாலூர்.) ஒரு கிராமத்தின் எல்லைக்குட்பட்ட, ஆனால் கிராமத்துடன் எவ்விதத் தொடர்புமில்லாமல் வயல்கள் மத்தியில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சாதாரணமாகக் குடியில்லாமலும் உள்ள நிலைமையில், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தானது அக்கட்டடங்களுக்கு வீட்டு வரி விதிக்கலாமா?

பதில்: தடையில்லாமல் விதிக்கலாம்.

பாகம் பிரித்துக்கொண்ட சொத்தைப்பற்றி உயில்.

141. **கேள்வி**: (முருகேச முதலியார்—ஈரோடு.) இந்துத் தகப்பனும் மகனும் பாகம் பிரித்துக்கொண்டார்கள். அதன் பின், தகப்பன் தன் பாகச் சொத்தை மனைவி விற்கவும், எவ்விதமான வில்லங்க விவகாரத்திற்கும் உட்படுத்தலாமென்று கண்டு அவளுக்கு உயில் எழுதி வைத்திருக்கிறார். தகப்பன் இறந்தபின், மனைவி அச்சொத்தை விற்கவேண்டிய அவசியமில்லாதபோது, வேண்டுமென்று மகனுக்குத் துரோகம் செய்ய எண்ணி, பராதீனம் செய்தால் அது சரியா?

பதில்: அவள் அப்படிச் செய்வது சரியோ, சரி அல்லவோ, அது சட்டப்படி செல்லும். பாகம் பிரித்துக்கொண்ட சொத்தை ஒருவர் தம் இஷ்டப்படி விநியோகம் செய்யலாம்.

"தத்துப்புத்திரன்"—தத்து புத்திரி"

142. **கேள்வி**: (அகஸ்தியர் வாசகசாலை—செவந்திபுரம்) இந்து ஒருவருக்குப் பூர்வீகச் சொத்துக்களும் சுயார்ஜித சொத்துக்களும் உண்டு. இரண்டு தாரம் கலியாணம் செய்தும் குழந்தையே இல்லாமலிருந்து வேறொரு ஆண் மகனைத் தத்துப் புத்திரனாக எடுத்து வளர்த்து வந்தார். அப்புத்திரன் இருக்கும்போது அவர் வேறொரு பெண் குழந்தையைத் தத்துப் புத்திரியாக எடுத்து வளர்த்து வந்தார். அவர் மேலே கண்ட சொத்துக்களைத் தம்முடைய மனைவி பேருக்கு எழுதி வைத்திருந்தால், ஷ சொத்துக்கள் தத்துப் புத்திரனைச் சேருமா அல்லது தத்துப் புத்திரியைச் சேருமா?

பதில்: ஒரு இந்துவானவர் தமக்கு ஒரு ஆண் மகனைத்தான் சுவீகாரம் செய்து கொள்ளலாமே ஒழிய ஒரு பெண் மகளைச் சுவீகாரம் செய்துகொள்ள முடியாது. சுவீகார மகனைத்தான் தத்துப் புத்திரன் என்றும் சொல்லுவது. தத்துப்புத்திரி என்பது கிடையாது. சட்டப்படி சுவீகாரம் செய்துகொள்ளப்பட்ட ஆண் மகனுக்குச் சொந்த மகன் போலவே சொத்துக்களில் உரிமை உண்டு. ஆகையால் சுவீகாரம் எடுத்துக்கொண்டவருடைய பூர்வீகச் சொத்துக்களில் சுவீகார மகனுக்குச் சரிபாதி பாகம் உண்டு. அச்சொத்துக்களை அவர் மனைவி பெயருக்கு எழுதி வைத்திருப்பது முற்றிலும் செல்லாது. ஆனால் அவருடைய சுயார்ஜித சொத்தை அவர் தம் மனைவிக்கு எழுதிவைத்திருப்பது செல்லும். ஆனால் அம்மனைவியானவர் அச்சொத்துக்களை யாதொரு விநியோகமும் செய்யாமல் இறந்துபோய்விட்டால், அது சுவீகார மகனைத்தான் சேருமே ஒழிய அபிமானமாக வளர்க்கப்பட்ட 'தத்துப் புத்திரி' என்று அழைக்கப்படும் பெண்ணுக்கு யாதொரு வார்சு பாத்தியமும் ஏற்படாது.

சர்ப்பம் தீண்டி இறந்த விவசாயக் கூலியாளின் மனைவி நஷ்ட ஈடு கேட்கலாமா?

143. **கேள்வி**: (M. G. S. தம்புச்செட்டியார்—மோல்மென்.) ஒருவருடைய நெல் வயலில் அறுவடை சமயத்தில் அறுப்பு அறுப்பதற்காகச் சில கூலியாட்களை ஏற்படுத்தி அறுப்பு அறுக்கும் சமயம் ஒரு கூலியாளை, பழுத்துச் சாய்ந்து கிடந்த நெல் பயிரின் கீழிருந்து ஒரு சர்ப்பம் தீண்டி இறந்துவிடுகிறார். கூலியாளின் மனைவி நிலத்தின் சொந்தக்காரர்மீது நஷ்ட ஈடு கேட்கச் சட்டமிருக்கிறதா?

பதில்: இப்போதிருக்கும் சட்டங்களின்படி இறந்தவரின் மனைவி யாதொரு நஷ்ட

ஈடும் கேட்க முடியாமல் இருப்பது வருந்தத் தக்கது. நஷ்டஈடு சம்பந்தமாக இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. 1923-ஆம் வருடத்திய தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டம் (The Workmen's Compensation Act) என்பது நெல் வயலில் வேலை செய்யும் தொழிலாளருக்குப் பொருந்தாது. 1855-ஆம் வருடத்திய மரணம் விளைவிக்கக் கூடிய எதிர்பாராச் சம்பவச் சட்டம் (The Fatal Accidents Act—1855) என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதன்படி ஒருவருடைய சட்ட விரோதமான செய்கையினாலோ, அசட்டையாலோ, தவறுனாலோ வேறு ஒருவருக்கு மரணம் ஏற்பட்டால்தான் இறந்தவருடைய மனைவி மக்கள் அதற்கு அவரிடமிருந்தது நஷ்ட ஈடு கேட்கலாமென்று இருக்கிறது. நெல் வயலின் சொந்தக்காரருடைய தவறான செய்கையாலோ, அசட்டையாலோதான் அங்கே பாம்பு இருந்ததென்று ஏற்படுமானால், இச்சட்டப்படி இறந்த கூலியாளின் மனைவிக்கு நஷ்ட ஈடு கேட்கலாம்.

தேயிலை 'டியூடி'

144. கேள்வி: (சுப்பிரமணியம் — செங்கோட்டை.) தேயிலைக்கு மத்திய சர்க்கார் எக்ஸைஸ் டிபார்ட்மெண்டால் ஏற்படுத்திய 'டியூடி' விஷயமான சட்ட திட்டங்கள் என்ன?

பதில்: தேயிலைக்கு 'எக்ஸைஸ் டியூடி' சுங்கவரி (Excise Duty) 1953ஆம் வருடத்திய 15-ஆவது மத்திய திருத்தச் சட்டத்தால் விதிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பொட்டணம் கட்டப்படாத தேயிலைக்குப் பவுண்டு ஒன்றுக்கு ஒரு அணு சுங்கவரியும்; 60 பவுண்டுக்குட்பட்டுப் பொட்டணமாகக் கட்டப்படும் தேயிலைக்கு மேற்கண்ட ஒரு அணு தவிர அதிகமாகப் பவுண்டு ஒன்றுக்கு மூன்று அணு சுங்கவரியும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

பல வார்டுகளில் ஒருவரே "வோட்" போட்டால்.

145. கேள்வி: (L. 495) ஒரு மேஜர் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் தேர்தலில், ஒரு நபர் தன் பெயர் 4, 5 வார்டுகளில் பெயர் இருப்பதால் அந்தந்த வார்டு சென்று ஓட்டுப் போட்டிருந்தால், இறந்தவர்கள் பெயரால் அவர் ஓட்டுப் போட்டிருந்தால், அல்லது ஊரில் இல்லாதவர்களின் பெயரைச் சொல்லி அவர் ஓட்டுப் போட்டிருந்தால் டிை ஓட்டுகள் செல்லுமா? டிை விஷயங்கள் கோர்ட்டாரால் ருசுவானுல் ஓட்டுப் பெற்றவரின் மொத்த ஓட்டுக்களில் இருந்து கழிபடுமா? இருமுறை வோட் போட்டவர்கள், இறந்தவர்கள், ஊரில் இல்லாதவர்கள் பெயரைச் சொல்லி ஓட்டுப் போட்டவர்கள் மேல் எந்தெந்தக் கோர்டில் யார் யாரால் நடவடிக்கை எடுப்பது? டிை விஷயம் ருசுவானுல் மறு தேர்தல் வருமா? அல்லது இந்தக் கள்ள ஓட்டுக்கள் யாருக்குக் கிடைத்ததோ அவர்கள் மொத்த ஓட்டிலிருந்து கழித்து மீதத்தில் யார் அதிகமாக ஓட்டுப் பெற்றுர்களோ அவர்களைத் தலைவராக இருக்கக் கோர்டார் உத்தரவிடுவார்களா?

பதில்: அவ்விதம் வோட்டுப் போடுவது இந்தியன் பீனல் கோடு என்ற 'குற்றங்களைப்பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 9A செக்ஷன் 171Dபடி ஒரு தேர்தல் குற்றமாகும். இக்குற்றத்திற்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். கிரிமினல் கோர்ட்டில் குற்றம் செய்தவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அது தவிர இக்குற்றமானது தேர்தலில் ஜயித்தவருடைய ஒற்றுமையின் பேரில் செய்யப்பட்டிருந்தால், அவருடைய தேர்தலை ரத்துச் செய்யவேண்டுமென்று பஞ்சாயத்துத்தேர்தல் கமிஷனரிடம் (டிஸ்டிரிக்ட் முன்சீப்) தேர்தல் மனுக் கொடுக்கலாம். ஜயித்தவருடைய தேர்தலை ரத்துச் செய்து வேறு அபேட்சகர்தான் ஜயித்தவர் என்று தீர்ப்புச் செய்யவும், அல்லது மறுபடியும் தேர்தல் நடக்கவேண்டுமென்று உத்தரவு செய்யவும் தேர்தல் கமிஷனருக்கு அதிகாரமுண்டு. கீழே கேள்வி 148 ஐயும் பார்க்கவும்.

விற்பனை வரி அதிகாரிக்கு வியாபாரியின் பணத்தை எண்ணச் சொல்ல அதிகாரமுண்டா?

146. கேள்வி: (சங்கமேசுவரன்—கரூர்.) விற்பனை வரி அதிகாரியானவர் கடையில்

வந்து கணக்குகளைச் சரிபார்த்து, கையிருப்பு ரூபாய்களை எண்ணும்படி கேட்கலாமா? அப்படி அவர் கேட்கும்போது வியாபாரி ரூபாய்களை எண்ணிச் சொல்ல மறுக்கலாமா?

பதில்: வியாபாரியின் கையிருப்பு ரூபாய்களை எண்ணும்படி சொல்ல விற்பனை வரி அதிகாரிக்குச் சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. விற்பனை வரி அதிகாரிக்குள்ள சோதனை அதிகாரங்களை விவரிக்கும் விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 14 (2)ல் அவ்வதிகாரியானவர் வியாபாரியின் ரொக்கப் பணத்தைச் சோதனை செய்யலாமென்று இல்லை. உயர் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்கள் அளித்த ஒரு தீர்ப்பிலும் இது வியக்தமாக விளக்கப்பட்டிருக்கிறது. (1952 (1) மதராஸ் லா ஜர்னல் பக்கம் 14—மரியல வெங்கடேசுவரராவின் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு.)

பஞ்சாயத்துத் தேர்தலில் வாக்காளர்களுக்கு இனமாக விசிறி கொடுத்து ஜயித்தால்?

147. கேள்வி: (L. 540) ஒரு பஞ்சாயத்துப் போர்டு தேர்தலில் போட்டி போடும் அபேட்சகர்களில் ஒருவர் இரண்டணா மதிப்புள்ள விசிறிகளில் தம்முடைய சின்னங்களையும் பெயரையும் அச்சடித்து, தமக்கு 'வோட்' போடும்படியாகவும் வோட்டர்களுக்கு வினியோகித்து, வெற்றி பெற்றால், ஓட்டர்களுக்கு விசிறி கொடுத்தது சட்ட விரோதம் என்று வழக்குத் தொடரமுடியுமா?

பதில்: முடியும். தமக்கு 'வோட்' போடுவதற்காக வாக்காளர்களுக்கு விசிறி கொடுப்பது இந்தியன் பீனல்கோடு என்ற குற்றங்களைக் குறித்த சட்டப்படி ஒரு குற்றமாகும். (இந்தியன் பீனல்கோடு-அத்தியாயம் 9A-செக்ஷன் 171 D.) அவ்விதக் குற்றம் செய்தவருடைய தேர்தலை ரத்துச் செய்ய பஞ்சாயத்துத் தேர்தல் கமிஷனருக்கு அதிகாரம் உண்டு. (பஞ்சாயத்து தேர்தல் தகராறு விதிகள். 5-6-1951 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்-பாகம் I. A. பக்கம் 109 "வக்கீல்'—1952 மே இதழ் பக்கம் 25 பார்க்கவும்.)

148. கேள்வி: (L. 495) ஒரு மேஜர் பஞ்சாயத்து போர்டில் நடக்கும் தேர்தலில் ஒரு நபர் தன் பெயர் நான்கு வார்டுகளிலும் 'ஓட்டர் லிஸ்டில்' இருப்பதால், நான்கு வார்டுகளிலும் 'ஓட்டு'ப் போடுவது நியாயமா? அது குற்றமானால் எங்கே கேஸ் போடுவது? யாரால் போடப்பட வேண்டும்?

பதில்: பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 12 (3) இன்படி ஒரு பஞ்சாயத்தின் வாக்காளர் ஜாப்தாவில் ஒருவருடைய பெயர் ஒரு இடத்தில்தான் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. இந்த ஷரத்துக்கு முரணாக ஒருவருடைய பெயர் நான்கு வார்டுகளிலும் இருந்தாலும் அந்த வாக்காளர் ஒரு தேர்தலில் ஏதாவது ஒரு இடத்தில்தான் "வோட்" போடலாம். இதற்காக ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத்துத் தேர்தல் விதி 25-ன்படி ஒரு வாக்காளர் "வோட்" போட முன் வரும்போது அவரை "இந்தத் தேர்தலில் நீங்கள் இதற்கு முன் இந்த போலிங் ஸ்டேஷனிலோ, வேறு போலிங் ஸ்டேஷனிலோ 'வோட்' போட்டாகி விட்டதா—"என்று தேர்தல் உத்தியோகஸ்தர் கேட்பார். 'இல்லை' என்று வாக்காளர் சொன்னால் தான் அவருக்கு "வோட்டு"ச் சீட்டு கொடுக்கப்படும். (21-8-1951 தேதி சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I. A, ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 154 பார்க்கவும்.) ஒரு தடவை "வோட்" போட்டவர் மறுபடியும் "வோட்" போடுவது குற்றம் தான், அக்குற்றம் செய்தவர்மீது சர்க்கார்தான் கிரிமினல் வழக்குத் தொடர வேண்டும்.

கோயில் வரி.

149. கேள்வி: (L. N. ராமசந்திரன்—லால்குடி) ஒரு கோயிலுக்கு வருட வருமானம் எவ்வளவு இருந்தால், 'எண்டௌமெண்டு'க்கு வரி செலுத்தும்படி ஏற்படும்?

பதில்: 1951 ஆம் வருடத்திய சென்னை இந்து மத தர்ம பரிபாலனச் சட்டத்தின் செக்ஷன் 76ல் இது சம்பந்தமான ஷரத்து இருக்கின்றது. செக்ஷன் 76 (1) ஷரத்துப்படி சர்க்காரும் அதன் உத்தியோகஸ்தர்களும் செய்து வரும்

சேவைக்காக ஒவ்வொரு கோயிலும், அதன் வருட வருமானத்திலிருந்து 5 சத விகிதத்திற்கு மேற்படாமல் சர்க்காரால் செய்யப்படும் விதிகளில் குறிப்பிடப்படும் ஒரு கட்டணத்தைச் சர்க்காருக்குக் கட்டி வரவேண்டும். இது தவிர செக்ஷன் 76 (2)ன்படி, வருட வருமானம் ரூ. 1000க்கு மேற்பட்ட கோயில்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் செலவுக்காக வருட வருமானத்தில் $1\frac{1}{2}$ சத விகிதத்திற்கு மேற்படாமல் கமிஷனரால் நிர்ணயிக்கப்படும் கட்டணத்தையும் கட்டிவர வேண்டும்; என்று இருக்கிறது. ஆனால் மேற்கண்ட செக்ஷன் 76 (1) ஷரத்தானது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 27-ஆவது ஷரத்துக்கு முரணாக இருப்பதால் அது செல்லாதென சென்னை ஹைகோர்ட்டில் ஒரு வழக்கில் இரண்டு உயர் நீதிபதிகள் தீர்ப்பளித்திருக்கின்றனர். அரசியல் அமைப்புச் சட்டத்தின் 27 ஆவது ஷரத்தில் இருப்பது இது தான்:—"**குறிப்பிட்ட எந்த மதத்தை யாவது அல்லது மதப் பிரிவையாவது வளர்ப்பதற்காகவோ அல்லது பராமரிப்பதற்காகவோ செலவு செய்வதற்கென்று ஒதுக்கப்படும் வரிகளைச் செலுத்தும்படி எவரும் கட்டாயப் படுத்தப் படலாகாது.**" இது ஒரு 'வரி' தான் என்றும், இந்து மதஸ்தாபனங்களுக்காக மட்டில் செலவு செய்யப்பட வேண்டிய இவ்வரியைக் கொடுக்கும்படி, எவரும், எந்த இந்துவும் கூட கட்டாயப் படுத்தப் படலாகாததெனவும், ஆகையால் செக்ஷன் 76 (1) ஷரத்து செல்லாதெனவும் நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர். ஆனால் 76 (2)ன்படி கணக்குத் தணிக்கை (ஆடிட்)க்காக விதிக்கப்படும் கட்டணம் ஒரு 'வரி' அல்ல என்றும் அது மட்டில் செல்லுமெனவும் நீதிபதிகளின் அபிப்பிராயம்.

(ஷிரூர் மடத்து வழக்கு—சிதம்பரம் பொது தீக்ஷதர்கள் வழக்கு—இரண்டு வழக்குகளிலும் அளிக்கப்பட்ட தீர்ப்பு 1952 (1) மதராஸ் லா ஜர்னல்—557—உயர் நீதிபதிகள் சத்திய நாராயணராவும். ராஜகோபாலனும்.)

மரத்தின் நிழல்.

150. **கேள்வி:** (சுப்பய்யா—திருநெல்வேலி) ஒருவருடைய் நிலத்திலிருக்கும் மாமரங்கள் தென்னை மரங்களுடைய நிழல் அடுத்த நஞ்சை நிலத்தில் விழுவதால், நஞ்சை நிலத்தின் மகசூல் கம்மியாகின்றது. மரங்களின் நிழல் விழாமல் தடுக்க மரங்களை வெட்டி அப்புறப்படுத்த நஞ்சை நிலக்காரர் தாவா போடமுடியுமா?

பதில்: நிழல் மட்டில் விழுந்தால் நஞ்சை நிலக்காரர் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் தம்முடைய நஞ்சை நிலத்தின் மீது படர்ந்து நிற்கும் கிளைகளை மட்டில் அகற்ற நஞ்சை நிலக்காரருக்கு உரிமை உண்டு.

சுவீகாரத்தை ரத்து செய்யலாமா?

151. **கேள்வி:** (பழனியப்பன்—கொழும்பு) (1) ஒரு இந்து விதவை தான் கூட்டி இருக்கும் சுவீகாரப் பிள்ளையை ரத்து செய்து விட்டு வேறு ஒரு பிள்ளையை சுவீகாரம் செய்து கொள்ள முடியுமா? (2) கணவனால் நிராகரிக்கப்பட்ட முதல் மனைவி, கணவன் இறந்த பிறகு இறந்தவருடைய சொத்தில் உரிமை கொண்டாட முடியுமா? அல்லது இறந்தவருடைய சொத்துக்கள் ஷியாருடைய கடைசி மனைவிக்குத் தான் சொந்தமா?

பதில்: (1) முடியாது. சட்டப்படி சுவீகாரம் செய்து கொள்ளத்தான் விதவைக்கு உரிமை இருக்கிறதே ஒழிய, சுவீகாரத்தை ரத்து செய்ய உரிமை இல்லை. (2) நிராகரிக்கப்பட்ட முதல் மனைவிக்கும் வார்சு பாத்தியம் உண்டு.

பிச்சைக்காரர்கள்.

152. **கேள்வி:** (கோவிந்தராஜுலு—சேலம்) சென்னை மாகாணத்தில் பிச்சைக்காரர்கள் அதிகமாகி விட்டார்கள். இதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

பதில்:— சென்னை ராஜ்யத்தில் பொது ரஸ்தாக்கள், பொது இடங்கள் ரயில்வே ஸ்டேஷன் ரயில்வண்டிகள் முதலிய இடங்களில் பிச்சை எடுப்பதைக் குற்றமாக்கும் சட்டம் ஒன்று இருக்கிறது. 1945-ம் வருடத்திய சென்னை பிச்சைக்காரர் தடைச் சட்டம். இச்சட்டத்தைத் தேவையான இடங்களில் மட்டில் அமுலுக்குக் கொண்டுவர, ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

153. கேள்வி: (ரெங்கனுதன்—சிங்கம் புணரி) நாட்டுச் செக்குகளுக்கு நிரந்தர மான விற்பனை வரி விதி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. மரத்தினுல் தயாரிக்கப் பட்ட நாட்டுச் செக்குகளை (பிண்டோ செக்குகள்) இயந்திரத்தின் உதவியால் வேலை செய்து வந்தால், அச்செக்குகளுக்கு விதி விலக்கு உண்டா?

பதில்: கிடையாது. இது 'நாட்டு'ச் செக்கு அல்ல.

புரோநோட்டுக்கு ஸ்டாம்பு.

154. கேள்வி: (அளகப்ப செட்டியார்— திருவண்ணுமலை.) புரோ நோட்டுக்கு ஸ்டாம்பு ஒட்டாமலோ அல்லது குறை வாக ஒட்டினுலோ, அது கோர்ட்டுக்குப் போனுல், புரோ நோட்டு செல்லாதா, அல்லது 'பெனல்டி' ஸ்டாம்பு அபராதம் கட்டினுல் போதுமா?

155. கேள்வி: (ராமசாமி-அம்பிளிக்கை) பிராமிசரி நோட்டுகளுக்கு எத்தனை ரூபாய் வரை எத்தனை அணு ரெவின்யூ ஸ்டாம்பு ஒட்ட வேண்டும்? குறைத்து ஒட்டப்பட்ட பிராம்சரி நோட்டிற்குப் பரிகாரம் என்ன?

பதில்: ரூ. 250க்கு மேற்படாத தொகைக்கு 1 அணுவும், ரூ. 250க்கு மேல் ரூ. 1000க்கு மேற்படாத தொகைக்கு 2 அணுவும், ரூ. 1000க்கு மேற்பட்ட தொகைக்கு அணு 4-ம் ஒட்டவேண்டும். ஸ்டாம்பே ஒட்டாமலோ, குறைந்த ஸ்டாம்பு ஒட்டப்பட்டோ இருக்கும் பிராமிசரி நோட்டுக்கள் செல்லமாட்டா. அவை கோர்ட்டில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அபராதம் கட்டி புரோ நோட்டுக்களை ஏற்றுக் கொள்ளவும் சட்டம் இடங் கொடுக்கவில்லை.

கோயில் டிரஸ்டியை நீக்க யாருக்கு மனு.

156. கேள்வி: (வெங்கடராமன்—கண்டர மாணிக்கம்) (1) ஹிந்துமத பரிபாலன போர்டு சபையாருக்கு பிரதி வருஷமும் (Contribution) துகை செலுத்திக் கொண்டு வரும் கிராம கோயில்களின் டிரஸ்டிகள் சரிவர கோவில் நிர்வாகங் களைக் கவனிக்காமலிருந்தால், டிரஸ்டிகளை நீக்குவதற்கு யாருக்கு மனுப் போட வேண்டும்?

(2) ஷை கோயில்களின் நிர்வாகங்களைப் பஞ்சாயத்து போர்டில் சேர்த்து நடத்து வதற்கு சட்டத்தில் வழி இருக்கிறதா?

பதில்: (1) பிரதேசக் கமிட்டிக்குட் பட்ட கோயில்களின் டிரஸ்டிகளை நீக்க டிப்டி கமிஷனருக்கும், மற்ற கோயில் களின் டிரஸ்டிகளை நீக்க கமிஷனருக்கும் அதிகாரம் உண்டு. அவர்களுக்குத்தான் மனுப்போடவேண்டும். சென்னை இந்து மத—தர்ம பரிபாலனச் சட்டம் செக்ஷன் 45. (2) கோயில்களின் நிர்வாகத்தை நேரடியாகப் பஞ்சாயத்துக்களிடம் ஒப் படைக்கப் பஞ்சாயத்துச் சட்டத்தில் இட மில்லை.

157. கேள்வி: (ஷேக்முகமது — அறந் தாங்கி) இறந்த முஸ்லீம் ஒருவருக்குத் தான் சுயேச்சையாக சம்பாதித்த ஸ்தாவர சொத்துக்கள் இருக்கின்றன. அவருக்கு ஆண் மகனே சகோதரர்களோ இல்லை. ஒரு பெண்ணும் அப்பெண்ணுக்கு ஒரு ஆண் மகனும் ஒரு பெண்ணும் இருக்கின் றனர். இறந்தவருடைய பெண்ணின் மகன் மேஜரானதும், சில சொத்துக்களை சொந்த முறைமையிலும் தம்முடைய மைனர் தங்கையின் கார்டியன் முறைமை யிலும் விற்றுவிட்டால், அது செல்லுமா?

பதில்: செல்லாது.

158. கேள்வி: மருதமுத்து நாயக்கர் — காங்கேய நகரம்.) ஒருவர் தான் சுயார் ஜிதமாய் சம்பாதித்த சொத்துக்களைக் கொண்டு மடம் ஒன்று ஸ்தாபனம்செய்து அதில் ஓர் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்து அந்த மடத்திற்குத் தானும் தன் வார்சுகளும் டிரஸ்டி முறையில் சொத் துக்களை மானேஜ் செய்து சில குறிப்பிட்ட தர்மங்களை நடத்தி வரும்படியும் தர்மம் செய்ததுபோக மீதி இருக்கும் தொகைக் கும் ஷை மடத்தின் பேரிலேயே நிலம் வாங்கி வைக்கும்படியும் கண்டு ஒரு செட் டில்மெண்டு பத்திரம் எழுதிவைத்திருக் கிருர். ஷையாருக்கு வார்சுகள் அதிக மாகி விட்ட காரணத்தால் ஷை செட்டில் மெண்டில் கண்ட சொத்துக்களையும் காணுத இதர சொத்துக்களையும் சேர்த்து தன் வார்சுகளுக்கு ஒரு உயில் எழுதி வைத்திருக்கிருர். அந்த உயில் செல்லுமா?

ஷடி சொத்துக்களின் பேரில் எண்டௌமெண்டு போர்டாருக்கு வரி விதிக்க அதிகாரமுண்டா?

பதில்: தர்மத்திற்கென்று சட்டப்படிக்கு நிச்சயமாகக் கொடுத்துவிட்ட சொத்துக்களைக் குறித்து, சொத்து கொடுத்தவர் மறுபடியும் உயில் எழுதி வைக்க முடியாது. அச்சொத்துக்கள் தர்மத்துக்குச் சொந்தமாகி விட்டன. சென்னை இந்துமத—தர்ம பரிபாலனச் சட்ட ஷரத்துக்கள் எந்த இந்து தர்மத்திற்கும் பொருந்தும்படி செய்ய அச்சட்டத்தில் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (சென்னை இந்துமத — தர்ம பரிபாலனச் சட்டம் செக்ஷன் 3.)

159. **கேள்வி:** (V. N. சுவாமி – உசிலம் பட்டி.) ஒரு மேஜர் பஞ்சாயத்துப் போர்டு எல்லைக்குள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு லைசென்சு பெற்றுள்ள நெல் அறவை, கடலை உடைப்பு, தானிய மாவுக்கள் அறவை நடத்திவரும் மில்லில் இன்ஜினின் குதிரை பவரை அதிகரிக்கவோ, அல்லது அதிக குதிரை பவர் உள்ள வேறு இன்ஜின் ஒன்றை அதே இடத்தில் ஸ்தாபிக்கவோ மறுபடியும் அனுமதி வாங்கிக் கொள்ளவேண்டுமா? அல்லது தெரிவித்தால் போதுமா?

பதில்: பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 92 (b) ஷரத்துப்படி புதிதாக அமைக்கப்படும் யந்திரங்களுக்கும் அனுமதி வாங்கிக் கொள்ளவேண்டும். தெரிவிப்பது போதாது.

160. **கேள்வி:** (சுப்பையா — தேரம் பாளையம்.) ஒருவர் தம்முடைய பூமியை வேறு ஒருவருக்குக் கிரயம்செய்து 30 வருடங்களுக்குமேல் ஆகிறது. ஆனால் கிரயம் செய்தவரே கிரயத் தேதியிலிருந்து நாளது வரையில் அப்பூமியைக் குத்தகைக்கு வைத்துக்கொண்டு குத்தகையும் கொடுத்து அனுபவித்து வருகிறார். ஆகையால் இனி கிரயத்தை ரத்து செய்துவிட முடியுமா?

பதில்: முப்பது வருட அனுபவத்தால் சில சந்தர்ப்பங்களில் ஒத்தி அல்லது போக்கியங்கள்தான் ரத்தாகி விடுமே ஒழிய, கிரயம் செய்தது ரத்தாகாது. கிரயம் செய்து கொடுத்தவர் அதே சொத்தை, எவ்வளவு வருடங்கள் குத்தகைக்கு வைத்திருந்தாலும், அக்காரணத்தால் கிரய சொத்து அவருக்குத் திரும்பவும் வந்துவிடாது. கிரயமும் ரத்தாகாது.

161. **கேள்வி:** (K. சுந்தரம் – புளியம்பட்டி.) (இந்து) அண்ணன், தம்பி இருவர்கள். பிதுரார்ஜித சொத்து ஒன்றும் கிடையாது. இரண்டு பேரும் மைனர்களாக இருக்கும்போது, தாய் கார்டியனாக இருந்து, நஞ்சை, புஞ்சை 2 ஏகர் நிலம் அண்ணன் பேருக்கு அதாவது தன் மூத்த மகன் பேருக்கு கிரயம் வாங்கி வைத்தார். பிறகு தாய் இறந்துவிட்டாள். இரண்டு பேர்களும் மேஜராகி சொத்தை வாசா மூலம் பங்கிட்டுகொண்டு தனித்தனியே அனுபவித்து, சர்க்கார் தீர்வையும் செலுத்திக்கொண்டு வந்தார்கள். அண்ணன் இறந்துவிட்டான். அவனுக்கு மனைவியும், ஒரு மைனர் பெண்ணும் இருக்கிறது. (1) அண்ணன் சொத்துக்கு யார் வார்சு? 2) அண்ணன் மனைவி அவருடைய புருஷன் அனுபவித்து வந்த சொத்தில் கொஞ்சம் தன் சம்ரக்ஷணைக்காகவும், தன் மைனர் சம்ரக்ஷணைக்காகவும்-மைனர் கார்டியனாக இருந்து சொத்தை விற்கலாமா? விற்றால் செல்லுமா?

பதில்: (1) அண்ணன் சொத்துக்கு முதலில் அவருடைய மனைவியும், மனைவியின் ஆயுளுக்குப்பின் பெண்ணும்தான் வாரசுகள். (2) சம்ரக்ஷணைக்காகச் சொத்தை விற்றால் செல்லும்.

162. **கேள்வி:** (ஹனிபா – அறந்தாங்கி.) ஒரு அச்சகம் (பிரிண்டிங் பிரஸ்) நடத்த ஏ. டி. எம். முன்பு 'டிக்ளரேஷன்' சர்டிபிகேட் வாங்கிக்கொண்டால், அதை மறுபடியும் வருடா வருடம் புதுப்பிக்க வேண்டுமா? அல்லது ஒரு முறை வாங்கியது எத்தனை நாளைக்குள் காலாவதியாகும்?

பதில்: 'டிக்ளரேஷன்' முதல் முதல் வாங்கிக்கொண்டால் போதும். வருடா

வருடம் புதுப்பிக்க வேண்டியதில்லை. இதற்குக் காலாவதியும் இல்லை.

163. கேள்வி: (கோவிந்தசாமி—செங்கம்) போலீசார், ஒருவன் மீது சந்தேகம் என்று பிடித்துக்கொண்டு வந்து, அவனை அடித்து சித்திரவதை செய்துகூட அவனிடம் வாக்கு மூலம் வாங்கச் சட்டம் இருக்கிறதா?

பதில்: அப்படிச் செய்வது சட்ட விரோதமாகும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அப்படிச் செய்தால் தான் உண்மையைக் கண்டு பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை போலீசாரிடம் இருந்து வருவதால் தான் சில சமயங்களில் அவ்விதம் செய்த போலீசார்களே மாட்டிக் கொண்டு விடுகிறார்கள்.

164. கேள்வி: (அபிராம சுந்தர பாண்டியன்—இடையாங்குடி) ஒரு தனிப் பட்டா நிலத்தில் ஏற்பட்ட ஒத்தப் புள்ளி போட்ட பாதையைப் பட்டாதார் பொது ஜனங்களுக்கு விரோதமாக அடைத்துக் கொண்டால், மைனர் பஞ்சாயத்து அது விஷயமாக நடவடிக்கை எடுக்கலாமா?

பதில்: பொது ரஸ்தாக்கள் தான் பஞ்சாயத்துக்குச் சொந்தமாகும். (பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 56.) பட்டா நிலத்தில் பொது ஜனங்கள் நடமாடுவது தடுக்கப்பட்டால், அது விஷயமாக பஞ்சாயத்து தலையிட முடியாது. பொது மக்கள் தங்கள் உரிமைகளை ஸ்தாபித்துக்கொள்ளச் சட்டத்தில் வேறு வழிகள் இருக்கின்றன.

தமிழ்நாடு ஆவணக் காப்பக ஊழகம்
18772
சென்னை-600 008

கல்யாண
பட்டுநூல்
ஜவுளிகளுக்கு
ராதா ஸில்க்
எம்போரியம்
119, பெரியதெரு,
கும்பகோணம்.

சரக்கு விற்பனைச் சட்டம்
The Indian Sale of Goods Act
எளிய தமிழ் நடையில் "வக்கீல்" பிரசுரம் 6 என்று பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது. வியாபாரிகளுக்கு மிக அவசியமானது.
விலை ரூ. 1-8-0
தபால் சார்ஜ் பிரத்தியேகம்
மானேஜர் - "வக்கீல்"
தமிழ் சட்டப் பத்திரிகை
கும்பகோணம் (S. I.)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editors:—V. S. VIJAYARAGHAVACHARI, B. A., B. L.

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக்கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டி
யுடன் கிடைக்குமிடம் :

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி
பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்,
கெருடலாயத்தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு :—
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு.
மதுரை.

பெங்களூர் காஞ்சீபுரம் கும்பகோணம்
பட்டுச் சேலைகள் நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத்தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள் :
காரைக்குடி, நாட்டரசன்கோட்டை.

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் புகையிலை
TRADE MARK
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு மனோரம்மியமானது.

ஸ்டார் புகையிலை கம்பெனி,

உரிமையாளர்கள்:—
மீ.ந.அ. செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்
தபால்பெட்டி நீ. 20.
புதுக்கோட்டை.

WRAPPER PRINTED AT THE ANDAVAN PRESS KUMBAKONAM

Regd. No. M. 5399. The "Vakil" August 1953.

ஸ்தாபிதம் 1909 போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:
For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris:
B. BALAPATTABI CHETTIAR,
246, Vysyal Street,
COIMBATORE.